தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57

மலர் : 4

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு : 2014—உருத்ரோத்காரி ஆடி
(1983 சூலை — ஆகஸ்ட்)

MALLIKA ARTS

பொழிற்றொண்டர் :
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர் : 57 | உள்ளுறை | மலர் : 4

1. சிலப்பதிகாரத்தின் யாப்பு அமைதி 145
பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு.

2. உழுக்கொண்மை சுகவரர் மறுப்பு
விளக்கத்திற்கு ஒரு புதிய விளக்கம் 159
தி. அழகப்பராசு, எம். ஏ.,

3. பாரதி பயன்படுத்திய சிற்றிலக்கிய
வகைகள் 160
டாக்டர் சொ. சிங்காரவேலன், M.A., Ph.D.,

4. திருவள்ளுவரின் நாடு, மொழி,
இனப் பொதுமைகள் 175
முனைவர் கு. மோகனராசு, B.Sc., M.A., Ph.D.,

5. திரு. வி. க.-வின் இதழ்ப்பணி 183
நெல்லை ந. சொக்கலிங்கம், எம்.ஏ., ஏ. எம்.ஏ.,

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் யாண்டு — 2014 உருத்ரோத்காரி — ஆடி 1983 சூலை — ஆகஸ்ட்	மலர் : 4

சிலப்பதிகாரத்தின் யாப்பு அமைதி

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தமிழ் இலக்கியப் பூங்காவில் பன்னெடுங் காலத்திற்கு முன்பே மலர்ந்து, மணம் பரப்பத் தொடங்கிய மனோரஞ்சித மலர் இளங்கோவடிகள் படைத்த சிலப்பதிகாரம். நினைப்பவர்க்கு நினைத்த முறையில் நினைத்த மணத்தைத் தந்து, மகிழ்விக்கும் பேராற்றலும் பெருவனப்பும் மலர்களிலே மனோரஞ்சிதத்திற்கு உண்டு. அதைப்போன்று தமிழ் இலக்கியங்களுள் வேண்டுவார்க்கு வேண்டும் உணர்வுகளை ஊட்டியும், கருத்துகளை நல்கியும் மனம் மகிழச்செய்யும் பேராற்றலையுடையது சிந்தைக்கினிய சிலப்பதிகாரமாகும்.

முன்னுரை :

தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே சிலப்பதிகாரத்திற்குத் தனி

இடம் ஒன்று உண்டு. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் உதிரிப்பூக்கள். அவற்றை ஒன்ருகத் தொகுத்து இலக்கிய மலர்மாலையாகப் படைத்த சான்ருேர்கள் சிலரைப்பற்றி நாம் அறிவோம். அவையாவும் தனிப்பாடல்கள்; அவற்றில் 'கதை'க்கு இடமே இல்லை என்பதை நாடு நன்கறியும்.

முதன்முதல் ஓர் ஆசிரியரால் இயற்றப்பட்ட தமிழ்நூல் தொல்காப்பியம்; அடுத்து, திருவள்ளுவரின முப்பால் அவ்வழி வந்ததாகக் காட்சியளிக்கிறது. இவற்றுள் முதலில் குறிப்பிடப் பட்டது இலக்கணநூல்; பிறகு சுட்டப்பட்டது அறநூல். இவற்றிலிருந்து வேறுபடுவது சிலப்பதிகாரம். நூலின் கருவாகிய கதை, அதை எடுத்துரைக்கும் முறை முதலியவற்ருல் பழைய இலக்கியங்களிலிருந்து வேறுபட்டது சிலப்பதிகாரம். ஒரே ஆசிரியரால், ஒரு கதையை மையமாகக் கொண்டு, கதைபொதி பாட்டாகக் காப்பிய வடிவம் பெற்றது சிலப்பதிகாரம். இவ்வகை யில் பிற்காலத் தமிழ்க் காப்பியங்களுக்கு ஒரு முன்னேடியாக — வழிகாட்டியாக சிலப்பதிகாரம் விளங்கியது.

பிறநாட்டு இலக்கியங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியை யும் காண்போமானுல், அவற்றின் ஆதி இலக்கியமாகப் போற்றப் படுவது தொன்மைச்சிறப்பும் கற்பனை வளமும் வாய்ந்ததாகப் பாராட்டப்படுவது —காப்பியமாகும் உலகத்தின் உயர்தனிச் செம் மொழிகள் பலவற்றில் இந்நிலையைக் காணுகிருேம். ஆனுல், நம் தமிழ் இலக்கியத்துள் நேர்மாருன ஒரு நிலை அமைந்திருப்பது வியப்பூட்டுகிறது சிறப்புமிக்க சங்கப் பாடல்களுக்குப் பிறகே, சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரம், முதல் தமிழ் காப்பியமாகத் தோன்றியுள்ளதைக் காணுகின்ருேம். 'சிலப்பதிகாரத்திற்கு முன்னரே தமிழில் காப்பிய நூல்கள் சில இருந்தன; காலவெள்ளத் தில் சிக்கி அவை மறைந்துபோயின, எனக்கூறும் மரபுவழிச் செய்தியாகிலும் வழக்கில் இருந்து வருகிறதா என்று ஆராய்ந் தால், அவ்வாறு நினைப்பதற்குத் தடையங்கள் யாதும் கிடைக்க வில்லை.

இவ்வகையில் நம் கன்னித்தமிழ், சீனமொழியோடு ஒப்புமை யுடையதாக ஒளிர்கிறது. தன்னுணர்ச்சிப் பாடல்களையும் அறச்செய்யுள்களையும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போற்றி வளர்த்த சீனப்பெருமக்கள், ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரே காப்பிய இன்பத்தை அனுபவிக்கத் தொடங்கினர். இன்றைய உலகில் நிலைத்த நெடுவாழ்வைப் பெற்றிருக்கும் மொழிகள் தமிழும் சீனமுமேயாகும். முன்னைப்பழம் பொருட்கு

முன்னையதாகவும் பின்னைப் புதுமைக்குப் பெரும் புதுமையான தாகவும் விளங்கும் உலகச் செம்மொழிகள் இவை இரண்டுமே யாகும். இவற்றுள் ஏறக்குறைய ஒரே வகையான இலக்கிய வளர்ச்சியை நாம் காணுகின்றோம். 'காப்பிய மரபு தோன்றியது மூன்றாவது காலகட்டத்தில்' என்பதை இங்குக் கருதத்தக்கதாகும்.

(1) தன்னுணர்ச்சிப் பாடல்கள்

(2) அறச்செய்யுள்கள்

(3) காப்பியம்

சிலப்பதிகாரத்திற்கு மற்றோர் சிறப்பும் உண்டு. பழைய செம்மை இலக்கிய மரபிற்குப் (Classical) பிற்பட்ட, ஆனால் சமய, காப்பிய, புராண மரபிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையை இளங்கோவடிகள் படம் பிடித்துக் காட்டுகிறார். வேறு வகையாகச் சொல்லுவதானால் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிலப்பதிகாரம் ஒரு திருப்புமையமாகத் திகழ்கிறது எனலாம். கருத்து வகையாலும் எடுத்துரைக்கும் முறையாலும் பிற்கால இலக்கியங்களுக்கு முன்னோடியாக அது அமைந்துள்ளதைப் பார்க்கலாம். இதைப்போன்றே பாவியல் பண்புகளாலும் புதுமைப் பொலிவினைப் பெற்றுள்ளது சிலப்பதிகாரம். யாப்பு வகையாலும் சிலப்பதிகாரம் பழைய மரபுகளிலிருந்து ஓரளவிற்கு வேறுபட்ட வளர்ச்சியைப் பெற்றிருப்பது இங்குக் கருதத்தக்கது. பழைய ஆசிரியப்பா மரபினைப் போற்றும் இளங்கோவடிகள், விருத்தம் எனும் புதிய செய்யுள் வகைக்கு வழி வகுத்துத்தந்த பெருமையைப் பெற்றவராவர்

யாப்பு

யாப்பு எனும் சொல்லிற்குக் "கட்டுகை, கட்டு, செய்யுள், அன்பு, உறுதி, சூழ்ச்சி, தொடர்பு" எனும் பல பொருள்கள் வழங்கிவருகின்றன. இவற்றுள் 'கட்டு, பிணைப்பு' எனும் பொருள்களே இங்குப் பொருத்தமானவை. யாத்தல் கட்டுதலாகும். சொற்களை யாப்புறவு பெறுமாறு யாக்கப்படுவதே (கட்டப்படுவதே, பிணைக்கப்படுவதே பா செய்யுள்) வாகும். பாக்கள் பலவற்றைப் பிணைத்து காப்பிய வடிவில் இயற்றப் படுவதே காப்பியமாகும்; 'யாப்பு' என்பதைப் பா, பாட்டு, தூக்கு. தொடர்பு செய்யுள் என்னும் சொற்களால் சுட்டுவதும் மரபாகும். இதனை,

'யாப்பும்
தூக்கும்பாட்டும் தொடர்பும் செய்யுளை
நோக்கிற் றென்ப துணங்கியோரே'

எனும் பழஞ்சூத்திரம் தெரிவிக்கின்றது.

தமிழில் யாப்புக்குரிய இலக்கணத்தை வகுத்த புலவர்கள் பலராவர் அவர்களுள் முதன்மையானவர் தொல்காப்பியர். தமது நூலுள் 'செய்யுளியல்' என்னும் பகுதியை அவர் அமைத்-துள்ளார். பிற்கால இலக்கண நூலார், 'யாப்பு' என்பதை நூற்பெயராக அல்லது இயலின் பெயராகப் பயன்படுத்தியுள்ளனர். ''எழுத்து முதலாக அசைசீர் அடியென ஈண்டோதப்பட்ட அடியினுற்றான் குறித்த பொருளை யிறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர்'' என்பது தொல் காப்பியரின் கருத்தாகும்.

" எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறிபுலவர் "

(தொல். செய். 74)

எனவே, 'செய்யுள்' யாப்பு என்னும் இருவகை வழக்கும் செய்யுளின் பண்புகளை எடுத்துரைப்பன என்பது தெரியவருகிறது. முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரச் செய்யுள்களின் இயல்புகளை ஆராயும்-விளக்கியுரைக்கும் இந்த ஆய்விற்குச் 'சிலப்பதிகாரத்தின் யாப்பு அமைதி' எனும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

பிறமொழிகளில் காப்பியங்கள் இயற்றப்படுவதற்குரிய யாப்பு-செய்யுள்வகை-ஈதெனச் சுட்டும் வழக்கு வளர்ந்து வந்திருக்கிறது. நம் தமிழில்கூட, காப்பியத்தை விருத்தயாப்பினல் இயற்ற வேண்டும் எனும் மரபு பிற்காலத்தில் உருவானதை நாம் நன்கறி வோம். கிரேக்க இலத்தீன் மொழிகளில்தோன்றிய காப்பியங்கள் நம் ஆசிரியப்பாவினைப் போன்ற ஒரு வகைப் பாவால் இயற்றப் பட்டன. சமற்கிருத மொழியில் ஆதிகாவியமாகிய இராமாயணமோ 'சுலோகப்' எனும் சூத்திர யாப்பால் இயன்றது. இடைக் காலத்திய ஐரோப்பிய மொழிகளில் 'ஈராயிக் கப்லெட்ஸ்' (Heraic Couplets எனப்படும் 'வீரகாப்பியத்துக்குரிய ஈரடிப்பா' வினல் காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன. நம்முடைய மொழியில் முதன்முதல் இயற்றப்பட்டனவாக இன்றைக்கு நமக்குக் கிடைத் துள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை எனும் மூன்று காப்பியங்களும் ஆசிரியம் எனும் அகவற்பாவாலேயே பெரிதும் அமைந்துள்ளன.

சிலம்பின் யாப்பு: ஒரு கண்ணோட்டம்

தமிழில் உள்ள பாவகையை ஆசிரியம் வஞ்சி, வெண்பா, கலி

என்பர். இவற்றுள் முதற்பா எனும் சிறப்புக்குரியது ஆசிரியப் பாவாகும். இதை அடுத்துத் தோன்றியது வெண்பா வஞ்சிப் பாவை ஆசிரிய நடைத்து என்றும், கலிப்பாவை வெண்பா நடைத்து என்றும் நம்முன்னோர்கள் கொண்டனர், சிலப்பதி காரத்தின் முப்பது காதைக்குள் பெரும்பாலானவை ஆசிரியப் பாவால் அமைந்தனவாகும். சில கலிப்பாவால் அமைந்தனவாகும் சில காதைகளின் ஈற்றிலே தனிவெண்பாக்கள் சில உள்ளன. அவை இளங்கோவடிகளால் இயற்றப்படவில்லை என்பதை அறிஞர் நன்கறிவர்.

மங்கல வாழ்த்துப் பாடலை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பர் அடியார்க்கு நல்லார். கனாத்திறம் உரைத்த காதையை கலிவெண்பாட்டு என்பர் அவர்; வேட்டுவ வரியைப் பலதாழிசைக் கொச்சகக் கலிப்பா என்பர். ஆய்ச்சியர் குரவையை மயங்கிசைக் கொச்சகமாகக் கூறுவர். வஞ்சினமாலை கலிவெண்பாப் பாட்டாகும். துன்பமாலையோ மயங்கிசைக் கொச்சகமாகும் ஊர் சூழ்வரியை (அயல்) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பர் அடியார்க்குநல்லார். குன்றக் குரவையைக் கொச்சகக் கலிப்பா என்பர் அரும்பதவுரைகாரர். வாழ்த்துக் காதையையும் அத்தகையதொரு கொச்சகக் கலிப்பாவாகக் கொள்ளலாம். வழக்குரை காதையும் இப்பாவினால் இயன்றதே

மனையறம் படுத்த காதை (2), அரங்கேற்றுகாதை (3), அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை (4), இந்திரவிழவூரெடுத்த காதை (5), கடலாடு காதை (6), கானல் வரி (7), வேனிற்காதை (8), நாடுகாண் காதை (10), காடுகாண் காதை (11), புறஞ்சேரியிறுத்த காதை (13), ஊர்காண் காதை (14), அடைக்கலக் காதை (15), கொலைக்களக் காதை (16), அழற்படு காதை (22, கட்டுரை காதை (23), காட்சிக்காதை (25); கால்கோள் காதை (26), நீர்ப்படைக்காதை (27), நடுகற்காதை (28), வரந்தருகாதை (30) எனும் பத்தொன்பது காதைகளும் நிலைமண்டில ஆசிரியப் பாக்களாகும். இவ்வாறு, பாவகையால் சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காதையும் தனித்தனிச் செய்யுளாக அமைந்து நிற்கின்றன.

ஆசிரியப்பாவின் அமைப்பும் அழகும்

'முதற்பா' எனப் போற்றப்படும் ஆசிரியம் நாற்சீர் கொண்ட அளவடியினால் அமைந்து வரும் பாவாகும். 'அடி' எனச் சொல்லுவதே நாற்சீர் அடியைத்தான் குறிக்கும்.

'நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே'

(தொல். செய் 32)

என்பது தொல்காப்பிய நூற்பா இருசீர், முச்சீர், ஐஞ்சீர், அறுசீர் போன்ற சீர்களைக் கொண்டு வரும் அடிகளைவிட, 'நாற்சீர்' சிறந்தது என்பதை அறிவுறுத்தலே 'நாற்சீர் கொண்டது அடி எனப்படும்' எனத் தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறியுள்ளார். இந்நாற்சீரடி அளவிற் பட்டமைந்தமையாலும் அது பயின்று வருதலாலும் மற்றக் குறளடி, சிந்தடி, நெடிலடி, கழிநெடிலடி என்பனவற்றிலும் சிறந்தது எனப்பேராசிரியர் விளக்கம் தருகின்றார். நாற்சீரடியை 'நேரடி' என ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார் வழங்குவதும்[1] இதன் சிறப்பினைப் புலப் படுத்தும்.

அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே

(தொல். செய். 35)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில் பேராசியர் அளவடியினால் பா இயற்றப்படும் மரபைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

> "அடியின் சிறப்பு என்பது அடி இரண்டும் பலவும் அடுத்து வந்த தொடையே பாட்டு என்றவாறு, தலை இடை கடைச் சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும் பான்மையும் செய்தார்; வஞ்சிப்பா சிறு வரவிற்று எனக் கொள்க"

இவ்வுரையில் 'அடி இரண்டும் பலவும் அடுத்து வந்த தொடையே பாட்டு' எனச் சிறப்பிப்பதிலிருந்து இரண்டடிக்கு மேற்பட்டதாய் (மூன்றடியாய்) வருவதனுள் ஆசிரியத்தை அடக்குவர். இதனை

ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை
ஆயிரம் ஆகும்; இழிபுமூன் றடியே

(தொல். செய். 155)

என்பர். இதனால் ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கு ஆயிரம் அடி; சுருக்கத்திற்கு எல்லை மூன்றடி என்பது புலனாகின்றது.

ஆசிரியப்பாவின் ஓசை அகவலாகும். இதனை,
'அகவல் என்பது ஆசிரியம்மே'

(தொல். செய். 80)

என்பர்.

''அகவிக் கூறுதலான் 'அகவல்' எனக் கூறப்பட்டது. அஃதாவது கூற்றும் மாற்றமுமாகி ஒருவன் கேட்பதற்கு ஒன்று செப்பிக் கூறுது தாங்கருதியவாறெல்லாம்

> வரையாது சொல்லுவதோராறும் உண்டு. அதனை வழக்கினுள்ளார்
>
> அழைத்தலென்றுஞ் சொல்லுப; அங்ஙனஞ் சொல்லுவார் சொல்லின்கண்
>
> எல்லாந் தொடர்ந்துகிடந்த ஓசை அகவலெனப்படும்''[2]

என்னும் பேராசிரியரின் உரைவிளக்கத்தால் நன்குணரலாம்.

எனவே, அகவல் ஓசையும், இயற்சீரும், அளவடியும் பெற்று வருவதே ஆசிரியப்பா என்பது புலனாகின்றது பிற்கால யாப்பிலக்கண நூலார் ஏ, ஓ, என், ஈ, ஆ, ஐ என்பனவற்றுள் ஒன்றனை இறுதியிற் கொண்டு முடியும் செய்யுள் ஆசிரியப்பா என்பர்.

சிலப்பதிகார உரையாசிரியர்கள், சிலப்பதிகாரத்தில் உள்ள ஆசிரியப்பாக்கள் யாவும் 'நிலைமண்டில ஆசிரியப்பா' வகையைச் சேர்ந்தன என்பர்.

> ''எல்லாவடியுமொத்து நடைபெறுமாயின்
> நிலைமண்டிலம்''

எனப்படும். அஃதாவது அடிகளெல்லாம் அளவடிகளாய், ஆசிரியப்பா நடக்குமாயின் அது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

இவ்விலக்கண வரையறையை அடிப்படையாகக் கொண்டு, சிலப்பதிகாரத்தை நோக்குவோம் மனையறம் படுத்த காதை நிலைமண்டில ஆசிரியப்பாவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது

> ''திங்கண் முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவும்
> இங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொல்
> மாசறு பொன்னே வலம்புரி முத்தே
> காசறு விரையே கரும்பே தேனே
> அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
> ....
> யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையிற்
> காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்
>
> (சிலப் 2:71-90)

இவ்வாசிரியப்பாவில் ஆசிரியவுரிச்சீரே அன்றி மூவசைச்சீரும் கலந்து வருகின்றது. அடிகள் எல்லாம் அளவடியாய், 'என்' எனும் அசையொடு முடிவதைப் பார்க்கின்றோம்.

"இன்சீர் இயைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே"

(தொல். செய் 29)

என்பது தொல்காப்பிய விதி. எனவே, ஆசிரியத்துள் மூவகைச்சீர் வந்தமை முறை கேடன்று என்பது புலனாகின்றது. ஆனால் நாம் முன்னர்க் குறிப்பிட்ட காதைகள் யாவும் நிலைமண்டில ஆசிரியப் பாவின் இலக்கணம் முழுவதையும் பெற்று விளங்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கலிப்பா : பொது இலக்கணம்

நால்வகைப் பாக்களுள் நான்காவதாகப் பேசப்பெறுவது கலிப்பா. வெண்பாவின் இயல்புகளைக் கொண்டது கலிப்பா என்பது தொல்காப்பியர் கருத்தாகும். ஐவகையடியினும் அளவடி மிகுதியாகிய பதின்மூன்றெழுத்தும் பதினான்கெழுத்தும் நெடிலடியும் கழிநெடிலடியும் கலியடிக்குரியன. நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரியவுரிச்சீரும நிற்ப, நிரை முதல் வெண்சீர் வந்து நிறையொன்றியக்காலுங் கலித்தளையாகும். கலிப்பாவினுள் முச்சீரடி நிரம்பவும் நிற்கும். கலிப்பாவின் ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரியத்தைப் போன்று முடிவுபெறும். துள்ளலோசை உடையது கலிப்பா. கலிவெண்பாட்டின் பெருமைக்கு எல்லை இல்லை என்பர் தொல்காப்பியர். [1] கலிப்பாவில் ஐவகை உறுப்புகள் இடம்பெறும். அவை தரவு, தாழிசை, தனிச்சொல், அம்போதரங்கம், சுரிதகம் என்பன.

தரவாவது மற்றையுறுப்பின் பொருள்களைத் தொகுத்துத்தந்து கலிப்பாவின் முதலுறுப்பாய் முன்நிற்பது. தாழம்பட்ட இசையுடையதாய் அடிகளாலே தரவினின்றுந் தொகை குறைந்து கலிப்பாவின் இரண்டாம் உறுப்பாய் வருவது தாழிசை. இதனை 'இடைநிலைப்பாட்டு' என்பர் தொல்காப்பியர். தரவு தாழிசைகளிலே பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும் கருவிளங்காய்ச் சீரும் வரும். இரண்டினுக்கும் அடி அளவடியேயாகும். 'தனிச்சொல்' என்பது தனியே சொல்லப்படும் ஒரு சீராய்ப் பொருள் நிரம்பி விட்டிசைத்துப் பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னே நிற்பது. சுரிதகமாவது தனிச் சொற்குப் பின்னே அகவற்பா, வெண்பா என்னும் இரண்டனுள் ஒன்றாய் வந்து கலிப்பாவின் இறுதியுறுப்பாய் முடிவது.

இவ்வாறு துள்ளல் ஓசையுடையதாய்த் தரவு, தாழிசை முதலிய உறுப்புக்களைப் பெற்று நடப்பது கலிப்பா எனப்படும். இது பொருளினாலும், இசையினாலும் எழுச்சியும் பொலிவும் வேகமும் பெற்று வருதலால் கலிப்பா எனப்படுகிறது.

ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா, கொச்சகக் கலிப்பா என்பன கலிப்பாவின் மூவகைகளாகும். சிலப்பதிகாரத்தில் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவில் ஏழு காதைகள் இயற்றப்பட்டுள்ளன. பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவில் ஒன்றும், கலிவெண்பாவில் இரண்டும் இயற்றப்பட்டுள்ளன, முன்னர் இவற்றை முறைப்படுத்திக் கூறியுள்ளோம்.

கலிவெண்பா

கலிப்பா வேறுதளை விரவி இசைமாத்திரம் தனக்குரிய துள்ளல் இசையாயும்,முற்றும் வெண்டளையினைந்தும் சிந்தடியால் முடிவது கலிவெண்பா. இது வெண்பாவினைப் போன்று முடிதலின் 'வெண் கலிப்பா' எனப்பட்டது. வேறுதளை விரவிவரும் வெண்கலிப்பாவிலே கலித்தளையே பெருபாலும் வருவதைக் காணலாம். முற்றும் வெண்டளை இயைந்து வரும் வெண்கலிப்பாவிலே நிரைமுதல் வெண்சீர் பெருப்பாலும் வரும். நேரீற்றியற்சீர் முன் புளிமாவும் வரும். இதனை,

ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே

(தொல். செய். 152)

எனத் தொல்காப்பியம் சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

சிலப்பதிகாரத்தில் உள்ள 'கனாத்திறம் உரைத்த காதை', 'வஞ்சின மாலை' என்பன இத்தகைய வெண்பாத்தளை பெற்ற பாட்டால் ஆகியன. கனாத்திறம் உரைத்த காதையின் உரை முடிவில்,

''இது, கனவென்னும் பொருளையே கருதாது மாலதி
கதையையும் தேவந்தி கதையையும் கலந்து கூறிற்
றேனும், உறுப்பழி
வின்றி நந்ததேனும் முந்நான்கு அடியின் இறந்து
வருதலான் நெடுவெண்
பாட்டாகாது கலிவெண்பாட்டாதல் காண்க''

என்று அடியார்க்குநல்லார் அறிவுறுத்துகின்றார்.

இதனால், பன்னிரண்டு அடிகளுக்கு மேற்பட்டு (79 அடிகள்) வருவதனால், இக்காதை நெடுவெண்பாட்டாகாது என்பதை அறிகிறோம்; கலிவெண்பாட்டாகக் கருதப்படுவதையும் காணுகின்றோம்.

''சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன
நலங்கேழ் முறுவனகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாடமதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடி
வினைகடைக் கூட்டவியங் கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சியா முன்

சிலப். 9.69-79)

இக்கலிப்பாவில் வேறுதளையாகிய ஆசிரியத் தளைவிரவி துள்ளல் இசையோடு வெண்டளை இயைந்து வருவதைக் காண்க. ஈற்றடி வெண்பாவினைப்போல் முச்சீரடியாக (சிந்தடியாக) அமைந்துள்ளதையும் நோக்குக. இதனால் இதனைக் கலிவெண் பாட்டு எனப் போற்றுகிறோம்

இதைப்போன்றே வஞ்சினமாலையிலும் கலிவெண்பாட்டிற் குரிய இயல்புகள் பொதிந்து இருப்பதைக் காணலாம்.

மயங்கிசை கொச்சகக் கலிப்பா

தரவு மாத்திரமாகியும்,தரவிரண்டாகியும்,தாழிசைகள் சிலவும் பலவுமாய்த் தரவு முதலியவற்றொடு பொருந்தியும் மயங்கியும் வரும் கலிப்பாவினைக் கொச்சகக் கலிப்பா என்பர். கொச்சகம்—சேலையின் தலைப்புப்பகுதி. சேலையின் தலைப்புப்பகுதியினைச் சிறிதும் பெரிதும் சமமுமாக மடித்து அடுக்கிக் கட்டுவது வழக்கம். இதைப் போன்று சிறிதும் பெரிதும் சமமுமாகிய உறுப்புகள் அடுக்கப்பட்டு நிற்றலால் இது கொச்சகம் எனப்பட்டது.

இதனுள், தரவு தாழிசை முதலிய உறுப்புக்களுள்ளே சில மிகுதலும், சில குறைந்தும், சில பிறழ்ந்தும் இயன் மயங்குதலும், வேறுபா விரவி இசைமயங்குதலுமுடையதாய் வருவதே மயங்கிசை கொச்சகக் கலிப்பா எனப்படும்.

இளங்கோவின் முத்தமிழ் காப்பியத்தில் (1) மங்கல வாழ்த்து, (2) கானல்வரி, (3) ஆய்ச்சியர் குரவை, (4) துன்பமாலை, (5) ஊர் சூழ்வரி, (6) வழக்குரைகாதை, (7) குன்றக்குரவை, (8) வாழ்த்துக் காதை எனும் எட்டுக்காதைகளும் மயங்கிசை கொச்சகக் கலிப்பா யாப்பின் இயற்றப்பட்டுள்ளன.

நம் ஆய்விற்கு மங்கல வாழ்த்துப் பாடலை எடுத்துக் கொள்வோம்.

முதலில் 'திங்களைப் போன்றதும்' என்பது தொடங்கி 'ஓங்கிப் பரந்தொழுகலான்' என்பது ஈருக உள்ள பகுதியினைக் காண்க. இதைத் தரவு என்போம். அடுத்துள்ள 'ஆங்கு' தனிச்சொல். 'பொதியிலாயினும்' முதல் 'முடித்த கேள்வி முழுதுணர்ந்தோரே' ஈருக உள்ள பகுதி இடைநிலைப்பாட்டு (தாழிசை. அடுத்துள்ள 'அதனால்' என்பது தனிச்சொல் இதைப் போன்றே 'அவளுந்தான்', 'அவனுந்தான்' 'அவனா', 'அவ்வழி' என்பன தனிச்சொற்கள். 'நாகநீள் நகரொடு', 'போதிலார் திருவினள்' 'மண்தேய்த்த புகழினன்' 'இருபெருங் குரவரும்' எனத் தொடங்குவனயாவும் சுரிதங்களாகும். 'முரசியம்பின' தொடங்கி ஒரு தனி ஆழி உருட்டுவோனெனவே' எனும் முடியும் பகுதியை நோக்குக. முதல் பகுதி உயர்ந்தோங்கிப் பெருவடிவமாய் எழுகிறது. ஆனல் வரவரச் சுருங்குகிறது. முதலில் ஐந்துசீர் அடியாய்த் தொடங்கி, பின்னர் நாற்சீரடியாய் சுருங்குகிறது. பின்னர் ஈற்றயலடி முச்சீரடியாய் அமைந்துள்ளதையும் காண்க. இவ் இறுதிப்பகுதி நேரிசை ஆசிரியப்பாவின் அமைப்பில் உள்ள சுரிதகமாகும்.

இவ்வாறு தரவு, தாழிசை, சுரிதகம் முதலிய உறுப்புக் களுள்ளே தாழிசை மிகுந்தும், தரவு குறைந்தும், தனிச்சொல் மிக்கும் சுரிதகம் மிக்கும், அம்போதரங்கம் குறைந்தும் வருவதனல் இதனை மயங்கிசை கொச்சகக் கலிப்பா எனலாம். கொச்சகம் போன்றும் பெரியதுப் சிறியதும் சமமுமான உறுப்புகள் இப்பாடலில் பயின்று வந்துள்ளதைக் காண்க.

இனிக் 'கானல்வரி'ப் பாட்டைக் காண்போம். மாதவியும் கோவலனும் பாடும் பாடல்கள் ஆற்றுவரியும் சார்த்துவரியுமாகவே தொடங்குகின்றன. வெண்டளை பிறழாது நீண்டும் குறுகியும் வரும் ஓசைகள் ஒரு சீருடைத்தாய் வருகிறது. இதற்கு அடுத்து வருகின்ற பாடல்கள் மயங்குதிணை நிலைவரியாகக் காட்டப் படுகின்றன. கானல் வரிப் பாடல்கள் அனைத்திலும் வெண்டளை

சிறப்புற்று விளங்குகிறது. 'ஆங்கு' எனும் தனிச்சொல் இடையே வந்து நான்கடி நேரிசை ஆசிரியப்பாவால் சுரிதகமாக முடிகிறது. ('ஆங்கு, மாயிருஞாலத்து' எனத் தொடங்கும் பாடல்).

இவ்வமைப்பினையுடைய கலிப்பாவினை 'உறழ்கலி' என்பர் டாக்டர் அ. சி. செட்டியார்.[5] இக்கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை! ''இருவராய்ப் பாடுவது உறழ்கலியானாலும், இங்கே வெளிப்படையான கூற்றும் மாற்றமுமாக அமையவில்லையாதலின் இக் கானல்வரி முழுதும் முடிவில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகவே கொள்ளுதல் வேண்டும். அல்லது வேட்டுவவரியை அடியார்க்கு நல்லார் கொள்ளுதல் போல பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவாகக் கொள்ளுதல் வேண்டும்.''[6]

பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா

ஒரு தரவு, மூன்று தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன வந்து முறையே பொருந்தி நிற்குமாயின், அதனை நேரிசையொத் தாழிசைக் கலிப்பா என்பர். இதே இலக்கணத்தையுடையதாய், தாழிசைமட்டும் பலவாகப் பெற்றுவருவது பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

சிலப்பதிகாரத்தில் 'வேட்டுவவரி' இவ்வியாப்பு அமைதியை உடையது.

இது 'கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி' என்பது முதல் 'வரியுறு செய்கை வாய்த்ததா லெனவே' என்பது வரையுள்ள 74 அடிகளைத் தரவாகவும், நான்கடியாய் வந்த ஒன்பது தாழிசை ('நாகப் நாலு' முதல் 'மங்கையுருவாய் மறையேத்த வேநிற்பாய்' ஈருக களாயும், 'ஆங்கினை'த் தனிச்சொல்லாகவும், 'ஆய்பொன்' எனத் தொடங்கி 'செல்லும்போலும்' ஈருக உள்ள மூன்றனையும் சுரிதகங்களாகவும், மீண்டும் பத்துத் தாழிசைகளையும் பெற்று முடிவதைக் காணலாம். இதனுல், இதனைப் பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவெனக் கூறுகிறோம்.

வெண்பா

சிலப்பதிகாரத்தில் காதைகளின் ஈற்றிலே காணப்படும் வெண்பாக்கள் பதினைந்தாகும். புகார்க் காண்டத்தில் மங்கல வாழ்த்துப் பாடல், இந்திரவிழவூரெடுத்த காதை, கானல்வரி, ஆகியவற்றின் ஈற்றில் வெண்பாக்களைக் காணோம். இதைப் போன்றே மதுரைக்காண்டத்தில் நாடுகாண் காதை முதல் அடைக்கலக் காதை வரையிலும் ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை,

ஊழ்சூழ்வரி ஆகிய எட்டுக்காதைகளின் இறுதியிலும் வெண் பாக்கள் இடம்பெறவில்லை. வஞ்சிக்காண்டத்தில் ஒரு வெண்பாவைக் கூட நாம் காண இயலவில்லை. மொத்தத்தில் பன்னிரண்டு காதைகளின் ஈற்றில் வெண்பாக்கள் உள்ளன. வேனிற்காதையின் ஈற்றில் இரண்டு வெண்பாக்களும், வழக்குரை காதையின் ஈற்றில் மூன்று வெண்பாக்களும். மற்றைய பத்துக் காதைகளிலும் ஒவ்வோர் வெண்பாவும் உள்ளன. இவற்றை இளங்கோவடிகள் இயற்றியதாகத் தெரியவில்லை. இவ்வெண் பாக்கள் யாவும் நேரிசை வெண்பாவின் அமைப்பினை உடையன வாக உள்ளன.

தொகுப்புரை

சிலப்பதிகாரத்தின் யாப்பு அமைதியை நோக்குங்கால், அதிலுள்ள காதைகள்,

(1) நிலைமண்டில ஆசிரியப்பா

(2) கலிவெண்பா

(3) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

(4) பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா

(5 வெண்பா

எனும் பாவகையால் படைக்கப்பட்டனவாகத் தோன்று கின்றன. நுட்பமாக கூர்ந்து நோக்கின்றபொழுது. சில காதைகள் நிலைமண்டல ஆசிரியப்பாவின் இலக்கணத்தில் சிதைந்து வருவதைப் பார்க்கின்றோம். குறளடிகளும், தனிச்சொல்லும் இடையே விரவி வரும் ஆசிரியப்பாக்கள் நமக்குத் திகைப்பூட்டு கின்றன. பெரும்பான்மையான இக்காதைகளின் இயல்புகள் நிலைமண்டல ஆசிரியப்பாவின் இயல்புகளோடு ஒத்துவருவதால் அவற்றை நாம் இப்பாவகையில் சேர்ந்ததாகக் கருதுகிறோம்.

காவல்வரிப் பாடல்களும் 'திங்கள்மாலை வெண்குடையான்' போன்றவற்றை அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தமாகக் கருதுவாரும் உளர்.[7] 'கைதை வேலி' எனத் தொடங்கும் வரிப் பாடலைக் கலிவிருத்தமாகக் கொள்ள இடமுண்டு என்பர் டாக்டர் அ. சி. செட்டியார்[8] 'துறைமேய் வலம்புரி' 'நிணங்கொள் புலால்' 'வலைவாழ்நர்சேரி' எனத் தொடங்கும் வரிப்பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தத்தின் திருத்தமுறுப் பழைய வடிவ அமைப்பாக இருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும். ஆயினும், அவற்றைச் சிலப்பதிகார உரையாசிரியர்கள்

தொல்காப்பியர் வகுத்துள்ள செய்யுள் இலக்கணத்திலேயே அடக்கிக் காட்டுகின்றனர்.

இதனால் ஓர் உண்மை புலனாகின்றது. இளங்கோவடிகள் பழைய செய்யுளியல் மரபினைப் போற்றிப் பின்பற்றும்பொழுது புதிய கூறுகள் சிலவற்றை அவற்றினிடையே புகுத்தியுள்ளார்; அல்லது நாட்டுப்பாடல்களாகக் கருதப்படும் வரிப்பாடல்களைப் பயன்படுத்தியபொழுது ஒலிநயம் கருதி அவற்றில் பழைய மரபுகள் சிதைய இடம் கொடுத்துள்ளார் என்பதாகும் பிற்காலத்திலே இப்புதிய பண்புகள் பெருவழக்குற்று. தனிப் பாவினங்களாக வடிவம் பெற்றன எனலாம். இவ்வகையில் நோக்குகின்றபொழுது விருத்தப்பாவின் தொன்மை வடிவங்கள் (Proto - type) சில சிலபபதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது தெரியவருகிறது ஆனால், அவை எங்கிருந்தோ கொண்டுவந்து இறக்குமதி செய்யப் பட்டவை அல்ல பழைய பாக்களில் எளிமையும் ஓசைநயமுங் கருதிப் புதிய கூறுகளைச் சேர்த்து இளங்கோவடிகள் பரிசோதனை செய்தபொழுது புதிய பாவினங்கள் தோன்றத் தொடங்கின எனலாம். இவ்வகையிலும் சிலப்பதிகாரம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகத் திகழ்வதைக் காணலாம்.

குறிப்புகள்

1 தொல். செய்யுளியல் 38

2. தொல். செய்யு 80, பேராசிரியர் உரை.

3. ஷை, 23, 24, 58, 59, 69, 75, 8?, 158

4 சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, பக். 251; உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1950.

5. Chidambaranatha Chettiar, A. Advanced Studies in Tamil prosody, Annamalai University, 1957, p. 95.

6 மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., கானல்வரி, கலைக்கதிர், 1961, கோவை, பக். 303.

7. வீரபத்திர முதலியார், T : விருத்தப்பாவியல், சென்னை, 1938, முன்னுரை, பக். 20,

8 Chettiyar, A.C ; Op. cit P. 104.

உழக்கெண்ணெய் ஈசுவரர் மறுப்பு விளக்கத்திற்கு ஒரு புதிய விளக்கம்

த. அழகப்பராசு, எம். ஏ.,
இளநிலை ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை 600 113.

தங்கள் தமிழ்ப்பொழில் மே — ஜூன் இதழில் (துணர்—57, மலர்-2) மதிப்புமிகு ந. ரா முருகவேள் அவர்களின் மறுப்பு விளக்கம் ஒன்றைப் படித்தேன் உழக்கெண்ணை ஈசுவரர் என்ற விளக்கமும் சரியானதாகப்பட வில்லை. திருக்கோயில் ஆசிரியர் அவர்களின் விளக்கமும் போதுமானதாக — பொருத்தமானதாக அமையவில்லை.

கல்வெட்டில் காணப்படுகின்ற தொடர் 'ஓலக்கண்ணேச்சுரர்' என்பது. அதை, உழக்கெண்ணை ஈசுவரர் என்றோ உலகக் கண் ஈசுவரர் என்றோ வலிந்து பொருள்கொள்ள வேண்டியதில்லை கல்லெழுத்தில், கு, ஒ இவற்றிற்கு அதிக வேறுபாடு காண்பது அருமை. எனவே அது குலக்கண் ஈசுவரர் என்று இருக்க வேண்டும். கல்வெட்டில், ஓலைச்சுவடியில் - ழ — ள — ல என்பன மாறுபட்டு எழுதப்படுவதையும் காண்கின்றோம். குளக்கண் என்பது குலக்கண் என்று அமைந்திருக்கின்றது குளம் என்றால் நெற்றி என்றும் பொருள்படும்.

திருக்குள முறைத்த கட்டாமரை (கல்லாடம், 31 : 9)

சிவபெருமான் நெற்றிக்கண் உடையவர். எனவே, 'குளக்கண் ஈசுவரர்' எனக் கொண்டு நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான் என பொருள் கொண்டால் பொருள் சிறக்கும்; பொருந்தும் என்பது என் எண்ணம்.

பாரதி பயன்படுத்திய சிற்றிலக்கிய வகைகள்

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்
டாக்டர் சொ. சிங்காரவேலன், M. A., Ph. D.,
[அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

1. ஐந்து சிற்றிலக்கிய வகைகள் :

பாரதி பயன்படுத்திய பாவகைகள், இலக்கிய வகைகள் முதலியன பற்றிய சிந்தனை இக்காலத் தமிழிலக்கிய வரலாற்றிற் சிறப்பிடம் பெறத்தக்கது. பழைய யாப்பு வடிவங்களையும் சிந்துகள் பலவற்றையும் பாரதி கையாண்டது போலவே, பழைய சிற்றிலக்கிய வகைகளையும், புதிய குறுங்காப்பியம், நெடும் பாட்டு முதலியவற்றையும் கையாண்டுள்ளார். பாரதி பயன் படுத்திய சிற்றிலக்கிய வகைகள் : (1) திருப்பள்ளியெழுச்சி (2) பஞ்சகம் (3) நவரத்தினமாலை (4) நான்மணிமாலை (5) திருத்தசாங்கம்.[1]

2. திருப்பள்ளி யெழுச்சி :

பாரதமாதாவிற்குப் பாரதி பாடிய திருப்பள்ளியெழுச்சி துயிலெடைநிலையேயாகும்.

> *"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
> *சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்'*

என்ற தொல்காப்பியநூற்பா, மன்னர்களைத் துயிலெழுப்புதலை உட்கொண்டமை காணலாம்.[2] கண்துயில் கொண்டிருத்தலை உடைய மன்னர்க்கு முன்னே சூதர்கள் வந்து, இரவின் முடிவாகிய குளிர்ந்த பொழுதாகிய விடியற்காலத்தின் இயல்புகளை நன்கு கூறித் திறை செலுத்தியவர்களும், இனிச் செலுத்த உள்ளவர் களும் ஆகிய அரசர்கள் உன்னைப் போற்றி உன் மொழியைக் கேட்டு உன் மொழியின்படி இனிது நடத்தலை விரும்பி வந்திருக் கின்றார்கள். ஆதலின் இத்துயிலினின்றும் எழுந்தருள்க என்று கூறின் அது மன்னர் துயிலெடையாம் என்ற பொருள்படப் பன்னிருபாட்டியல் இதன் இலக்கணம் கூறும். அந்நூற்பா வடிவம் இது :[3]

"கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டினிதியங்க
வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்
அதுவே மன்னர் துயிலெடை நிலையே"

இவ்வாறு மன்னர்களை துயிலெழுப்புமாறு பாடப்பட்ட இலக்கிய நூல்கள் இல்லை; ஆயினும் தெய்வங்களைத் துயிலெழுப்புமாறு பாடப்பட்ட இலக்கியப் படைப்புக்கள் நாலாயிரதிவ்யபிரபந்தத்திலும், திருவாசகத்திலும் காணப்படுகின்றன ; அவை துயிலெடைநிலை அமைப்புடையனவே ; திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்பில் அவை திகழ்கின்றன. பாரதியின் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி இவ்வகைச் சிற்றிலக்கிய அமைப்பு உடையதே.

"கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கன இருள் அகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரித் தொழுகின மாமலரெல்லாம்"

என்றும்,

"எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி"

என்றும்,

"மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக்குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம்"

என்றும், ஆழ்வார் பாடுவர்; 4 மணிவாசகரும்,

"அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது"

என்றும்,

"கூவின பூக்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்"

என்றும் பாடுவர். [5] அருள்பெற வேண்டி நிற்கும் குழுவினர் நிலையும், ஆழ்வார் திருமொழியில் (பா 6, 7, 9,) கூறப்படுகின்றது; மணிவாசகரும் (பா 4, 6) இவ்வாறே பாடுவர். காலை இயல்புகளையும், காத்திருக்கும் அடியார் இயல்புகளையும்

பழந்தமிழ்த் திருப்பள்ளியெழுச்சி மரபுகளைப் பின்பற்றியே பாரதியும் தம் பதிகத்தை அமைக்கின்றனர். ஆனால் தம் பதிகத்தை ஐந்து பாடல்களில் முடித்துக் கொள்கின்றனர்.

பாரதி இவ்வாறு ஐந்து பாடல்கள் பாடி, பழைய மரபின் வேறுபட்டு நிற்கின்றார்.

> "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
> புன்மை யிருட்கணம் போயின யாவும்
> எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
> எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி"

எனத் தொடங்குகின்றார்;[6] தொடக்கம் பழைய மரபிலேயே காலூன்றி நிற்றல் கண்கூடு. ''தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றார்'' என்று அருள் வேண்டும் தொண்டர் நிலை பாடுகின்றார்.[7]

> ''புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்
> பொங்கிய தெங்கும் சுதந்திர நாதம்"

எனப்பாடும் வரிகளில், விடுதலை வேட்கை கிளர்ந்தெழக் காண்கின்றோம்.[8]

> ''என்ன தவங்கள் செய்து எத்தனை காலம்
> ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே"

என்ற வரிகளில் சுதந்திரம் நோக்கிக் காத்திருக்கும் நிலை குறிப்பாகப் புலப்படுத்தப் பட்டமை காண்க.[9]

> ''விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
> வேண்டிய வாறுனைப் பாடுதும் காணாய்"

என்ற வரிகளில் தேசிய மொழிகள் யாவும் ஒருநிலைப்பட்டுநிற்றலை உணர்த்துகின்றார்[10]. ''மதலையர் எழுப்பவும் தாய் துயில் வாயோ, மாநிலம் பெற்றவள் இஃதுணராயோ'' என்ற வரிகள் அன்னையைத் தம் குழந்தையர் எழுப்புதல் உலகியலன்று என்று சுட்டுகின்றது.

பாரதிக்கு முந்திய திருப்பள்ளியெழுச்சிகள் தெய்வங்களைப் பற்றியனவே. பாரதத்தாயை முதற்கண் எழுப்பும் புதுவடிவமாகவே இதனைப் பாரதி அமைக்கின்றார்.

3. நவமணி மாலை

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு வகைப் பாக்களும், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகை இனங்களும் கலந்து ஒன்பது பாட்டுகள் பொருந்திய வகையினை உடையதே நவமணிமாலை என்று பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுக்கும்[11].

''பாவே இனமே என்றிவை இரண்டே
மேவிய வகையது நவமணிமாலை"

ஒன்பது பாட்டு என்று உரைக்காவிட்டாலும், ''நவ மணிமாலை'' என்ற பெயரால் (நவம் - ஒன்பது) அது பெறப்படும் என்பர்[12].

நவமணிமாலை அந்தாதித் தொடையாற் பாடப்பெற வேண்டும் என்று இலக்கண விளக்கப்பட்டியல் உரைக்கும்[13].

''வெண்பா முதலா வேறோர் ஒன்பது
நண்பாக் கூறல் நவமணிமாலை"

என்ற நூற்பா உரையில், ''வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமும் ஒன்பது உற அந்தாதியாகப் பாடுதல் நவமணிமாலையாம்'' என்று உரைக்கப்பட்டமை காணலாம்.

இனி, வச்சணந்திமாலை என்ற வெண்பாப்பாட்டியலோ,

''ஏய்ந்த விருத்தங்கள் எட்டட்ட மங்கலமாம்
வாய்ந்தன ஒன்பான் மணிமாலை"

என்றுரைக்கும்[14] ஆசிரிய விருத்தத்தாற் பாடுதல் வேண்டும் என்பதும் கவிதோறும் பாட்டுடைத் தலைவனைத் தேவர்கள் காக்க, என்று பாடுதல் வேண்டும் என்பதும் இங்கு உரைக்கப்பட்டவை. இவை அனைத்தையும் கற்ற பாரதி தாம் படைக்கும் புதிய நவமணி மாலையை ''நவரத்தின மாலை'' என்றே பெயரிட்டழைக்கின்றார்.

3.1 அமைப்பழகு

(1) பாடல் தொகையைத் தலைப்பிற்கேற்ப ஒன்பதாகவே அமைத்துக்கொண்டார். (2) அந்தாதித் தொடையைப் பின் பற்றினார். (3) பாவினும் இனத்தினும் அமைத்துக்கொண்டார். (4) முன்னர்க் கூறாதபோதும், ஒன்பது இரத்தினங்களின் பெயர்களை இயற்கைப் பொருளாகவேனும், இரட்டுற மொழிதற் பொருளாகவேனும் புதுமையாக ஆண்டுள்ளார். (நவரத்தின மாலை என்ற பெயரமைப்புப் பாடல் தொகை எண்ணிக்கை அடிப்படையில்

மட்டுமன்றி உள்ளடக்க வகையிலும் (content) பொருந்த வேண்டும் என்று கருதிப் பாரதி இதனை இவ்வாறமைத்தனர் என்று கருதலாம்.)

3.2 பொருட்சிறப்பு :

காப்புச் செய்யுள் ஒன்றைப்பாடி, ''சிவரத்ன மைந்தன்'' என்ற தொடரில் 'ரத்னம்' என்ற மணிப்பெயரை இழைத்துள்ளார்.[15] பாரதத் தாயின் பெருமைகளை வாயாரப் பாடுகின்றன இம் மணிமாலைப் பாடல்கள். பாரதத்தாயின் முன் பகை நில்லாது என்கின்றது வயிரப் பாட்டு. 2) காந்தியடிகள் பெருமையையும், ரவீந்திர நாத தாகூர் மொழியையும் உட்கொண்டது பவளப் பாட்டு 'விடுதலை திண்ணம்' ஆர்க்கின்றது செம் மணிக் கவிதை. (5) ''சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை; சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை, எடுமினோ அறப்போரின்'' என்ற காந்தி அடிகள் திறம் பாடுவது கோமேதகக் கவி. (7) வால வாயமாம் சிங்க முதுகினில் ஏறி வீற்றிருந்து வாழ்க என்று பாரத அன்னையை வாழ்த்தி முடிக்கின்றது வைடூரியப் பாட்டு. (9) (வைடூர்யம் — வாலவாயம்)

இவ்வாறு பாரதியின் நவமணிமாலை பழைய இலக்கண நோக்கில் பெரிதும் ஒன்றிப் புதுமை பொருந்தி நிற்கின்றது.

4. தசாங்கம் :

பன்னிரு பாட்டியல், மலையும், ஆறும், நாடும், ஊரும், முரசும் பரியும், களிறும், மாலையும், பெயரும், கொடியும் ஆகியவற்றைப் பற்றி ஒவ்வொரு நேரிசை வெண்பாவாற் பாடப்படும் சிற்றிலக்கிய வகையைத் தசாங்கம் என்று கூறும்[16]

''மலையே யாறே நாடே ஊரே
பறையே பரியே களிறே தாரே
பெயரே கொடியே என்றிவை தசாங்கம்

இவ்வாறு பாடும்போது, நேரிசை வெண்பாவின் முதற்குறளில் தொழிலை வைத்து, அடுத்த பகுதியில் பாட்டுடைத் தலைவர் களின் இயற்பெயரை வைத்துப் பாடுவது 'சின்னப் பூ' என்னும் பன்னிரு பாட்டியல்[17].

''நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவால்
ஈரைம்பது தொண்ணூ றிண்டெழுபான் — ஓரைம்பான்
தேர்ந்துரைக்கிற் சின்னப்பூ; ஈரைந்தாற் செப்பினுல்
நேர்ந்த தசாங்க நிலை"

என்பது வெண்பாப் பாட்டியல் விளக்கம்[18]

''நேரிசை வெண்பாவானிருபான்பெறு
தசாங்கத்தினைச் சொல்லல் தசாங்கப்பத்தாம்''

என்று கூறும் இலக்கண விளக்கப் பாட்டியல்[19]

களிற்றை நீக்கிப் 'படையை இணைத்துப் பாடும் போக்குத் திருவாசகத் திருத்தசாங்கத்திற் காணப்படுகின்றது.

பாரதி பாடும் திருத்தசாங்கம் பாரத தேவியின் திருப் பெயராலேயே அமைந்துள்ளது.[20] கிளியை விளித்துப் பாரத தேவியின் பத்து அங்கங்களைப் பாடுவதாக இதனை அமைத்துக் கொள்கின்றார் பாரதி. பெயர், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி ஆகியவை பாரதியின் தசாங்க உறுப்புகள்

களிற்றை நீக்கிப் 'படையை' இணைத்த திருவாசகத்தின் அமைப்பை இங்குக் காண்கின்றோம். பாரத தேவிக்கு நகரம்'காசி' என்கின்றனர். (3) ஆறு 'கங்கை' என்று பாடுகின்றனர். (4) மலை இமயம் எனப்பட்டது. (5) குலிசப்படை அவளுடையது எனப்படுகின்றது (7) வேத முரசமே கூறப்பட்டது. (8) பொற்றாமரை மாலை கூறப்பட்டது. (9) வயிரக் கொடி சொல்லப் பட்டது. (10) மூவண்ணக் கொடியாகிய தேசியக்கொடி கொடி யாகக் கூறப்படாமைக்குரிய காரணம் புலப்படவில்லை. இவ்வாறே காசி அவளுக்குரிய நகராகக் கூறப்பட்டமைக்குரிய காரணம் ஓர்ந்துணரத்தக்கது. (ஒரு வேளை வாரணாசியோடு கவிஞர்க் கிருந்த உறவு இதற்கு அடிப்படையாகலாம்.)

5. பஞ்சகம்

ஐந்து பாடல்களால் பாடப்படத்தக்க அமைப்பு இது ஐம் படை விருத்தம் என்ற அமைப்பினின்று இதனைப் பாரதி அமைத்துக் கொண்டிருக்கக் கூடும்.[21] 'அட்டமங்கலம்' என்பது முதலில் எண்ணிக்கை அடிப்படையிலான சிற்றிலக்கிய வகையிலான இதனை வடநூற் சார்பினால் மேற்கொண் டிருக்கலாம்.[22] அலங்கார பஞ்சகம் என்ற வெண்பாப் பாட்டியல் கருத்துக் கவிஞர்க்கு இதனை எழுதத் தூண்டுகோல் ஆகக்கூடும்.

''அறைந்த
கலங்காத மன் விருத்தம் காண்டகையவண்ணம்
அலங்கார பஞ்சகமென்றார்''

என்பது வெண்பாப் பாட்டியல் [23] வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், சந்த விருத்தம் ஆகியவை மாறி மாறி வர நூறு செய்யுட்களை அந்தாதித் தொடையிற் பாடுதலை 'அலங்கார பஞ்சகம்' என்று கூறும் இலக்கண விளக்கப் பாட்டியல் [24],

''வெள்ளை கலித்துறை அகவல் விருத்தம்
எள்ளலில் வண்ணம் இவையோ ரைந்தும்
அலக்கார பஞ்சக மாகுமென்ப"

மகாத்மா காந்தி பஞ்சகம் என்ற தலைப்பில் காந்தியடிகளைப் பற்றிய ஐந்து பாடல்கள் இவ்வகையிற் காணப்படுகின்றன. இரண்டு அறுசீர் விருத்தங்களும், மூன்று எழுசீர் விருத்தங்களும் இப்பஞ்சகத்தில் அமைந்துள்ளன. முன்னிலைப் பரவல் முறையில் இவை அமைந்துள்ளன [25]

'சத்தியாக்கிரகம்' என்ற அறப்போரையும், ஒத்துழையாமையையும் புகழ்வதாக ஐந்தாவது பாடல் உள்ளது. அனுமனையும், கண்ணனையும் ஒப்பிட்டு நான்காம் பாடல் புகழ்கின்றது.

''மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்"

என்ற நான்காம் பாடல் வரி இனியது, உணரத்தக்க நுட்பம் உடையது. 'மகாசக்தி பஞ்சகம்' எழுசீர் விருத்தங்கள் ஐந்துடன் விளங்கி இவ்வகையமைப்புடன் திகழ்கின்றது,

6. நான்மணி மாலை

வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும், விருத்தமும் ஒன்றுடன் ஒன்றற்கு இயைபை உண்டாக்கும் அந்தாதித் தொடையோடு நாற்பது வருமாயின் அதனை நான்மணிமாலை என்று பன்னிரு பாட்டியல் இயம்பும். [27]

''வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான் மணிமாலை''

விருத்தம் முன்னாகவும், அகவல் பின்னாகவும் வைத்து இலக்கண விளக்கப் பாட்டியல் உரைக்கும் [28]

''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின் பேசும் அந்தாதியின் நாற்பது பெறின்
நான்மணி மாலை ஆமென நவில்வார்''

இணைமணிமாலை, இரட்டை மணிமாலை ஆகியவற்றுடன் சேர்க்காமல், அமைத்ததனால், இருவகையாகிய ஆசிரியப்பாவும் இருவகையாகிய ஆசிரிய விருத்தமும் அமையப் பாடுவது இதன் இலக்கணம் எனலாம்.

பாரதிபாடும் விநாயகர் நான்மணிமாலை, நாற்பது பாடல்கள் உடையதாக, வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற வரிசையில் (இலக்கண விளக்கப் பாட்டியல் முறைப்படி) அந்தாதித் தொடையால் அமைந்துள்ளது,[29] காப்பும், வாழ்த்தும் தனித் தனியே அமையாமல் நாற்பது பாடல்களுக்குள்ளேயே அமைந்துள்ளன.

''எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலனம் இல்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திடநீ செயல் வேண்டும்
கனக்கும் செல்வம் நூறு வயது
இவையும் தரநீ கடவாயே''

என்றபாட்டு, பாரதியின் விழைவுகளைத் தெளிவாக்குகிறது,[30]

''நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்''

என்றபாட்டு பாரதியின் மூன்று குறிக்கோள்களை உட்கொண்டு ஒளிர்கின்றது.[31]

''பொய்க்குங் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண் முன்னே
மெய்க்குள் கிருத யுகத்தினையே
கொணர்வேன் தெய்வ விதியிஃதே''

என்ற 'யுகமானிடன்' என்ற பெரும்புகழ்க்குரியவர் கவிஞர் என்பதைத் தெளிவாக்குகின்றது.[32]

'வீழ்க கலியின் வலியெல்லாம்
கிருத யுகந்தான் மேவுகவே''

என்று பாரதி பாடும்போது, 'யுகமானிடனாக' அவன் விளங்குவதை மீண்டும் நாம் உணர முடிகின்றது.[33]

7. செவ்வியற் சார்பு - உண்மை:

பாரதி தம் கவிதைகளைப் புதிய நோக்கில் அமைத்தவர் ஆயினும், பழைய சிற்றிலக்கிய வகைகளையும் தம் கவிதைகளில் இவ்வாறு பயன்படுத்தியுள்ளார். இவை பெயர்களாற் பழையனவே யாயினும், உள்ளடக்கத்தாற் புதுமை சிறந்து பொலிவன. நடைமுறை மெய்ம்மை, (realism) செவ்வியற் சார்புண்மை (classicm) ஆகியவற்றைப் பாரதி பாடல்களிற் காணலாம். இவை பிந்திய நிலைக்கு எடுத்துக்காட்டாவனவாம். ஆகவே பாரதியின் புதிய யாப்பு வடிவங்களையும், இலக்கிய வடிவங்களையும் ஆராய்வதுடன் இவற்றையும் ஆராய வேண்டுவது தேவையாகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. பாரதியார் கவிதைகள் — பூம்புகார் பிரசுரம், சென்னை (1978) பக்கங்கள் 29 — 30 ; 30 — 33 ; 33 — 34 ; 92 — 103 ; 133 — 134; 69 — To
2. தொல்காப்பியம் — புறத்திணை இயல் — 36 ஆம் நூற்பா.
3. பன்னிரு பாட்டியல் — 206 ஆம் நூற்பா
4. நாலாயிரதிவ்யபிரபந்தம்—திருப்பள்ளியெழுச்சி—பா 1, 2, 4.
5. திருவாசகம் — திருப்பள்ளியெழுச்சி — பா 2, 3
6. பாரதியார் கவிதைகள் — பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி— மேற்கண்ட பதிப்பு — பக். 29 – 30 — பா — 1
7. மேற்படி — பா 1
8. மேற்படி — பா 2
9. மேற்படி — பா 4
10. மேற்படி — பா 5
11. பன்னிரு பாட்டியல் — 183 ஆம் நூற்பா.
12. பன்னிரு பாட்டியல் — கழகப்பதிப்பு (1970) பக் 109 உரைப் பகுதி
13. இலக்கண விளக்கப் பாட்டியல் — 77 ஆம் நூற்பா; உரைப் பகுதி.
14. வெண்பாப் பாட்டியல் — செய்யுளியல் — 24 ஆம் நூற்பா.
15. பாரதியார் கவிதைகள் — பாரதமாதா நவரத்தின மாலை— மேற்கண்ட பதிப்பு — பக். 30—33 — பா — 1

16. பன்னிரு பாட்டியல் — 140 ஆம் நூற்பா.

17. மேற்படி — 139 ஆம் நூற்பா.

18. வெண்பாப் பாட்டியல் — செய்யுளியல் 20 ஆம் நூற்பா.

19. இலக்கண விளக்கப் பாட்டியல் — 80 ஆம் நூற்பா.

20. பாரதியார் கவிதைகள் — பாரத தேவியின் திருத்தசாங்கம்— மேற்கண்ட பதிப்பு — பக். 33—34.

21. பன்னிரு பாட்டியல் — 179 ஆம் நூற்பா.

22. மேற்படி — 189 ஆம் நூற்பா.

23. வெண்பாப் பாட்டியல் — 22 ஆம் நூற்பா.

24. இலக்கண விளக்கப் பாட்டியல் — 84 ஆம் நூற்பா.

25 பாரதியார் கவிதைகள் — மகாத்மா காந்தி பஞ்சகம் — மேற்கண்ட பதிப்பு — பக். 69—70.

26. மேற்கண்ட பதிப்பு — பக். 133—134.

27. பன்னிரு பாட்டியல் — 153 ஆம் நூற்பா.

28. இலக்கணப் பாட்டியல் விளக்கம் — 61 ஆம் நூற்பா.

29. பாரதியார் கவிதைகள் — விநாயகர் நான்மணிமாலை. மேற்கண்ட பதிப்பு — கபக். 92 — 108.

30. வி. நான்மணிமாலை — பா. 7.

31. மேற்படி — பா. 25.

32. மேற்படி — பா. 39.

33 மேற்படி — பா. 35.

பாரதியின் பதாகைப் பாட்டு

K. சோமசுந்தரம், B A , B.L., தஞ்சை

பதாகையென்பது பகடுசால் பெருங்கொடியாகும். தமிழகத்தே பண்டை வழக்காக இஃது புரக்கப்படுதல் கருதற்பாலது. மற்றும் இஃது நலம்பேணும் கல்வி, கொடை, தவம் முதலியன நிகழ்வதைக் குறிப்பிடுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ள தென்பது சங்க நூற்களைக்கொண்டு ஐயுறவின்றித் துணிந்து கொள்ளப்படும்.

'பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்க'

என்பது மதுரைக்காஞ்சி. பண்டு தொட்டு இன்று வரை, அணி செய்யும் கொடிகளையும் பதாகைகளையும் பெரும்பாலும் கோயில் விழா நாட்களிலும் போர் வெற்றிக் காலங்களிலும் பறந்தாடக் கட்டுதல் பண்டைக்காலத்தே நிலையுறும் தமிழ் வழக்கு.

நாட்டின் முதன்மை கருதி, நாட்டிலே சிதறுண்டிருந்த மக்களது மகத்தான சக்திகளை முன்னேற்றத்திற்காக ஒன்று சேர்த்துத் துலங்கிடவும், அன்னாரது பண்பாட்டு வாழ்விலும் புதியதோர் தேசீய நல ஒற்றுமையினையும் ஒருமைப்பாட்டினையும் புரட்சியுறத் தோற்றுவிக்கவும் இன்றியமையாது வேண்டப்படும் கொடியினை, தீர்க்க தரிசனத்தால் 'தாயின் மணிக்கொடி பாரீர்' எனும் பாட்டில் பாரதியார், கற்பனை மூலமாகப் பேராற்றலுடன் அழகுபட, உளங்குளிர்ந்த நிலையில் சித்திரித்துள்ளார். இக்கொடி தியாகத்தையும் வீரத்தையும், சாந்தத்தையும், சத்தியத்தையும் காட்டும் பொற்பினையுடையதாய், பல சிறப்பியல்புகளோடு விளங்கி நிற்றலால், பாரதியாரது பதாகைப்பாட்டு, பாரதிப் பனுவல்களிலே வந்தனைக்குரிய முக்கியத்துவம் கொண்டு, சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயந்து, பேராண்மையினையும் நீடிய சுதந்திர உணர்வினையும் நல்கும் கவினுறு நோக்கங்களை யும் கொண்டுள்ளது. இதனை ஓசையினிமையோடு பாடுந் தோறும், மொழிச்செவ்வியும், தெய்வ அருளொளியும், சிறப்புரிமை யாகக் கொள்ளப்படும் பொருணுட்பங்களும் புலனாதல் கண்கூடு.

பாரதியார்,பாரத நாட்டைப் பரதநிலத்தேவியின் ஆலயமென வும் அதன் சிறப்பாய துவசமே பாரததேவியின் மணிக்கொடியென வும் கொண்டு, தாயுமானார் ஆனந்தக்களிப்பின் மெட்டில், பாமர மக்களது பாடல் வழிமுறையினை அனுசரித்துத் 'தாயின் மணிக்

கொடி பாரீர்' எனும் கீதத்தை இசைப்பாராயினார். இதனில் பாரதியாரது உள்ளத்தில் சித்திரித்து உருவான எண்ணங்களின் பொழிப்பினை ஈண்டு இம்மியும் விடாது காண்குவம். அது.

'தாயின் மணிக்கொடி உயரப்பறக்க விட்டது காண்மின்! ஓங்கிவளர்ந்த கம்பத்தின் உச்சியில் 'வந்தே மாதரம்' என்ற மந்திர சக்தி தாங்கி, வீரத்தை நாட்டிற்கு அளித்த பட்டுத்துகில் பட்டொளி வீசிப்பறப்பதைப் பார்மின்! சூழ்ற்றும் பெரும்புயற் காற்றடித்து வீசினாலும் அதனையும் மதிக்காது உறுதியுடன் நிற்கும் மாணிக்கப்படலமன்றோ இக்கொடியாகும்! இதனைப் புகழ்ந்தும் தாழ்ந்தும் வணங்குதல் சாலச்சீரிது. நேரிது.

தியாக உறுதியையும் பேராற்றலையும் குறிக்கும் இந்திரனது வச்சிரமும், எங்கள் சோதரரான இஸ்லாமிய இளம் பிறையுடன், தாயின் மந்திர வாசகமாய் வந்தே மாதரமும் ஏந்தித் தாங்கும் கொடியின் மாண்பினை வகுக்க வல்லவன் யானோ? இக் கொடிக் கம்பத்தினைச் சூழ்ந்து கொடியினை நல்லுயிர் ஈந்து காக்கும் உறுதி கொண்டுள்ள வீரர்கள் வணங்கி நிற்றலைக் காண்மின்! அன்னார் அணி அணியாக நின்று தேசப் பணியில் விறல் கொண்டு திறல் பெற்ற வடிவுடன் விளங்கும் அற்புதக் காட்சி ஓர் ஆனந்தமன்றோ! செந்தமிழ் நாட்டுப் பொருநர், தீக்கண் மறவர், சேரவீரர், சிந்தை துணிந்த தெலுங்கர், தாயின் சேவடியினைப் பணிந்து பணி பல புரியும் துளுவர், அரும் போரினிலே, காலன் அஞ்ச, எழுச்சியிற்களிப் புடன் கலக்கும் கன்னடரோடு, மராட்டர்,வானவர் போன்ற பெற்றுடைய இந்துஸ்தான் மல்லர், பாருள்ள மட்டும், அறப்போர் வீறல் யாவும் உள்ள மட்டும், மாதர்கள் கற்புள்ள மட்டும் கீர்த்தியும் சீர்த்தியும் ஓங்கும் ரஜபுத்திரர், பஞ்சாபியர்,

> 'துஞ்சும் பொழுதினுந் தாயின் — பதத்
> தொண்டு நினைத்திடும் வங்கத்தினோரும்'

உறுதி கொண்டு சேர்ந்து விளங்கி, தாயின் மணிக்கொடியினை விரித்து, வீரத்துடன் சுதந்திரமாக நிறுத்திக் காண்பது காணீர்! அன்னவர் மனத்திண்மையும் சிந்தனை வீரமும் நிரந்தரம் வாழ்க! தேர்ந்தவர் போற்றும் பாரத தேவியின் மணிக்கொடி நெடிது சிறப்புற வாழ்க!'' என்பதாம்.

பதாகைப் பாட்டினிலே பரவச முற்ற பாரதியார் நாட்டுப் பற்று, நாட்டு விடுதலை ஒற்றுமை, ஒருமைப்பாடு முதலியவற்றை வலியுறுத்தும் வகையில்

'இந்திரன் வச்சிர மோர்பால் — அதில்
எங்கள் துருக்க ரிளம்பிறை யோர் பால் (தாய்)
மந்திர நவேறத் தோன்றும் — அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ ?

எனப் பெருமிதத்து எழுச்சியோடு பாரதமாதாவின் துவச அமைப்பின் உட் பொருளைப் பாரதியார் சொல்லாற்றலோடு நிலைபெறச் செய்து விடுவது சிறிது நினைத்துப் பார்ப்பவர்க்கும் எளிதில் விளங்குவதேயாம். விண்ணாட்டு அரசராய இந்திரனது வச்சிரம், இந்து – முஸ்லீம் ஒற்றுமையை உணர்த்தும் இளம்பிறைச் சின்னம், மாநிலத் தாயை வணங்குவோம் என்ற 'வந்தே மாதரம்' எனும் வாசகத்தையும் அக்கொடியில் மாண்புறக் காணுமாறு அமைத்தும் வகுத்தும் அருளியது. நிவேதிதாதேவி யெனப் பாரதியார் வியந்து, அவரது அருஞ் செயலை மறக்கவும் மறுக்கவும் இயலாதவாறு, அதற்கேற்ப

'அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறா யெமதுயர் நா
டாம் பயிர்க்கு மழையாயிங்குப்
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்'

எனச் சிறப்பித்துப் பாரதியார் வாழ்த்தும் பாடியுள்ளார்.

பாரதியார், 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாட்டின் கண், ஒருமைப்பாடு திகழ, பாரதத்தின் தேசிய இன ஒற்றுமைக் காட்சியையும், பல மொழிபேசும் பாரத மக்கள் பலர் ஒருவரை யொருவர் உணர்ந்து நல்லுணர்வு பூண்டு, பாரதக்கொடியினைப் போற்றிப் பாதுகாத்துப் பேணும் உண்மையாய் ஒற்றுமை மாட்சி யையும், பொருளாதாரம், கலாசாரம், பல்வேறு தொழில்கள் முதலியவற்றால் இயல்பாக உளதாகும் ஒற்றுமை உறவின் வளர்ச்சியையும் காண விழைகிறார். எனவே அவர் காண விரும்புவது வேற்றுமையில் ஒருமைப்பாட்டுணர்வும், பன்மையில் ஒருமைப்பாடு ஒற்றுமையோடு வளரக்கூடிய சமத்துவ சமுதாயத்து பாரதீய ஒற்றுமைப் பாங்கும் ஆகியவைகளே. இதன்வழி மக்கள் பால், தாய்மொழி மீது ஆழ்ந்த அன்பு நிலவும் வகையில், பாரத நாட்டில் விதமுறு செப்புமொழி பதினெட்டும் சமநிலை பெற்றுப் பரிமளிக்கட்டும் என்பது பாரதியாரின் உட்கிடை.

இப்பாட்டினில் நிரந்தர வீர சுதந்திர தாகத்தையும் 'வந்தே மாதரம்' என்ற தாரகத்தையும். ஒருங்கே இக்கொடி அணிசெய்து உணர்த்துவதைப் பாரதியாரின் கவியுள்ளம் களிப்புறுவதையும் கர்ம சுதந்திர தாகத்தின் வேகத்தைத் தூண்டும் துணிவில் பெருத்தவரும் மலைபோல் திண்மை வாய்ந்து ஆத்ம சக்தியினை ஆதாரமாகக் கொண்டொழுகுபவரும், மாசற்ற தேச சேவையினையே கர்மயோகமாகப் பாவித்து, நாட்டைப்பாதுகாக்கும் வல்லமையும் மனோபலமும், தியாகமும் தொண்டும் உடைய வீர வைராகிகளும், நாட்டு விடுதலையினை நாடித் தாயின் மணிக் கொடியின் கீழ் அணி அணியாகக் கூட்டமைப்போடு நின்று,அதற்கு உள்ளத்துணர்வாலே 'வந்தே மாதரம்' என உருவத்தைக் கொடுத்து, விதமுறு மொழிவழி, நாட்டுப் பண்பாடி ஆவேசமுற வீர வணக்கம் செய்யும் பான்மையினை, பின்வருவதுணரும் ஞானத்தால் கண்டு பாரதியார் ஆனந்தபரவசமுமுற்று, தெய்வீக ஞான சுதந்திரத்தின் கனலைப்போற்றியதும் சிந்தித்து உணரற் பாலது.

'தாயின் மணிக்கொடி' எனும் கவிதையில், பாரதியார் இந்திய நாட்டு ஐக்கியத்தையும் அம்மக்களது மனத்தில் இந்திய ஒருமைப்பாட்டுணர்வையும் ஒன்றிணைத்து நாட்டுக்கொடி மூலம் ஒருமைப்பாடு உருவாக ஒன்றுபட்டால் வாழ்வில் உளதாகும் ஞானபோதத்தை முதற்கண் அறிவுறுத்துவாராயினார். பின்னர் மக்கள் பெருமிதம் கொள்ளுமாறு பாரத நாட்டின் உயர்வுச் சிறப்பினை, ஒற்றுமைகண்டு நப்பற்குரிய வீரர்களால் எவ்விதம் உறுதிப்பாடுடைய உணர்வு பூர்வமாக, கொடியினைச் சேர்ந்து காப்பாற்றப்படுவதைத் தெள்ளத் தெளிய பாரதியார் உணர்த்தி யுள்ளார். இதன் மூலம் பாரதியார் கொடி வணக்கத்தால் மக்கள் அமரநிலையும் சிறப்பும் எய்தும் நன்முறையைச் சுட்டிக்காட்டுவா ராயினார். மற்றும் கொடி வணக்கத்தின் வழி, நாட்டினிலே நலம் பொங்கவும், ஒற்றுமை மனோபாவத்தால் ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும், மக்கள் பேதமின்றிக் காணும் வழியையும் உணர்த்தியுள்ளார். மற்றும் பாரத நாட்டில் வழங்கும் விதமுறு மொழிகள் பதினெட்டாயினும், அவற்றில் விளங்கும் கருத்து சிந்தனை ஒன்றேயாதல் போன்று, பல்வேறு கலாச்சார பண்பு களும், படைப்புகளும், வகுப்புகளுமுள்ள மக்கள் மனதில், 'யாவரும் ஓர்நிலை, ஓர்நிறையென' இந்திய நாட்டுணர்வு, அறவழியில் நிலவி, மேலோங்க வேண்டுமென வற்புறுத்துவது பாரதக்கொடியென்றவுண்மையினைப் பாரதியார் குறிப்பாக ஆன்மீகவழியிலும் புகட்டுவாராயினார். இந்நோக்கங் கொண்டு உரிமை வாழ்வையும்,ஒருமைப்பாட்டுணர்வையும் மக்களுள்ளத்தில் எழுச்சியோடும் வளர்ச்சியோடும் நன்கு பதியும் வண்ணம், நன் மலர்ச்சியுறும் தன் எண்ணத்தில், பாரதப்புலவர், இறையுணர் வோடு திருப்பள்ளியெழுச்சியினை, இதயத்துடிப்புடனும் தெஞ்சுரத் துடனும் பாடியுள்ளது உன்னிப்பாய் கவனிக்கத்தக்கது.

தாயின் மணிக்கொடி, பாரத மண்ணில் காலூன்றி உயர்ந்து வானக இன்பம் இங்கு தென்பட, சுதந்திர வேட்கையின் எழுச்சியினை ஓசையுடன் எங்கும் பரந்து ஒலிப்பதனைத் தன்னுயிர் மூச்சாகக்கொண்டு, பாரதியார் பதாகைக்கவிதையினை பொங்கும் புரட்சியுணர்வுடன் சுவைபட மனமகிழ் சிறப்பால் பாடியுள்ளார். இதனில் பாரதக்கொடி வணக்கத்தால், மக்களுக்கு சித்தத்தில் தெளிவும், சிந்தனையில் அச்சமின்மையினையும், உளத்திண்மையும் மதி நுண்மையும் பெறுமாறுதற்குரிய நிலையினை உருவாக்கி, அன்னார் பெருமகிழ்ச்சி கலந்த பேரின்பத்தில் உறவுமுறையோடு திளைத்து வாழ்வதை, பாரதியார் தன் அறிவின் திறத்தால் ஆர்வமுடன் புலப்படுத்தியுள்ளார். இத்தகையவாறு நாட்டுக்கொடியினை முன்னிறுத்தி. வாழ்வில் ஒற்றுமையினை அடித்தளமாகக் கொண்டு, பாரதியாரின் கருத்துப்பட மக்கள் வாழத்தொடங்கினால், நாட்டில் அமைதி நிலவும் : நலம் தரும் ஒருமைப்பாட்டுணர்வு மலரும் : அடிமையில் மோகமுளாத வாழ்வும் புதுமை தோன்ற செழித்தோங்கும் : சமுதாயம் பேதமற்று மிளிரும் : இறையும் அருள் புரியும்.

விண்ணிலே தெளிந்தாடும் விரைவால், நாட்டு மணிக்கொடி இந்தியப் பெருநாட்டின் ஒற்றுமையினைக் குறிப்பதை எண்ணித் திளைத்த பிறவிக் கவியாகிய பாரதியாருக்கு இயல்பாக ஒற்றுமை தரும் சுதந்திர சக்தியுணர்வு உந்தப்படவே, பாரதியார் பின்னர் வரவிருக்கும் ஆனந்த சுதந்திரத்தை அடைந்துவிட்டோம் என விரைவும் விநோதத்தெளிவும் கொண்டு வீரவலிமையுடன் சுதந்திரப்பள்ளும், கொடி ஆடலோடு வெளிப்படையாகத் துலங்கும்படிப்பாடியுள்ளார் மற்றும் பின்வரும் விடுதலைக் களிப்பிலே, வருங்கால வாழ்வுக்கான விளக்கக் குறிப்பினையும், நோக்கு நயங்களையும் புதுமைநெறி தோன்றக் காட்டியும் விடுகிறார். இதனை ஈண்டு

'வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற்கிளவி
இறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்'

எனத் தொல்காப்பியர் கூறியிருத்தலும் கருதி உணர்தற்குரியது. இவ்வாறு கருதி உணர்ந்தவழி, சுதந்திரப்பள்ளு எனும் பாரதியாரது உண்மைக்கவிதை, கடவுளின் படைப்பு என்பதையும், பாரதியாரை ஆற்றலுடைய கவிஞராகவும், அக்கடவுளே நிறைவுடன் படைத்தாரென்பதும் உறுதிப்படுதல் 'தாயின் மணிக்கொடி' எனும் கவிதை மூலம் காண்க.

நாட்டுப்பதாகையின் உருவமைப்பு நாட்டு மக்களால் உகந்ததாகப் புலப்படும் வரை, அது திருத்தம் பெற எய்திய மாறுதல்களையும் வரலாற்று உண்மையினையும் ஈண்டு நினைவுகூரற்பாலன.

திருவள்ளுவரின் நாடு, மொழி, இனப் பொதுமைகள்

முனைவர் கு. மோகனராசு, B.Sc., M.A., Ph D.,
D.ANTH. D.Geog., D.H Ed., Cert-Ling, cert-Lx, cert-Skt,
சென்னைப் பல்கலைக் கழகம்

முன்னுரை

திருவள்ளுவர் பல்கலை—பலதுறைக் கல்விகளையும் கசடறக் கற்ற பேரறிஞர்; கற்ற கல்வியால் அவர் பெற்ற அறிவு, உலக நோக்கினராக அவர் மாறுவதற்கு வழிவகுத்துள்ளது. ஆகவே, தாம் கூறவந்த கருத்துக்கள் அனைத்தையும் 'உலகம்' என்னும் உணர்வோடே அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதனால், அவருடைய கருத்துக்கள் பெரும்பான்மையும் இனம், மொழி, நாடு, மதம், காலம், அனைத்தும் கடந்து, என்றும் வாழும் — எங்கும் வாழும் பொதுமை பெற்று மிளிர்கின்றன.

பொதுமை ஒளிர் புதுமை கண்ட திருவள்ளுவரின் திருக்குறளில் இடம் பெற்றுள்ள நாடு,மொழி,இனம் தொடர்பான கருத்துக்களை ஆராய்ந்து, அவற்றின்வழி வெளிப்படும் திருவள்ளுவரின் பொதுமை உணர்வை வெளிப்படுத்த முனைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1 நாடு

1 1 நாடும் நாட்டமும்

வான்மறை தந்த வள்ளுவப் பெருந்தகை, தமிழ் மண்ணில் தோன்றியவர்; தமிழ் மண்ணின் மணத்தை நுகர்ந்து, அதிலே தவழ்ந்தவர். தமிழ்நாட்டில் காலூன்றிக் கொண்டே தம் சிந்தனைக் கூடத்தைச் சுடர்விடச் செய்தவர்; அவருக்குச் சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். சேர சோழ பாண்டிய நாடுகளைப் பற்றியும் மிக நன்குகத் தெரியும். தமிழ் நாட்டின் செல்வங்களான கடல்கள், ஆறுகள், மலைகள் ஆகிய அனைத்திலும் பெரும்பாலானவற்றை அவர் தெளிவாக அறிந்தவர். தமிழ் நாட்டின் ஆட்சி முறை, சிறப்புச் செய்திகள், கலைச் செல்வங்கள் ஆகியனவும் அவர் அறிந்தனவே. இவ்வளவும் அவர் அறிந்திருந்தும் (கல்வி வழியானும் அனுபவ வழியானும்) இவற்றை அவர் மறந்தும் தம் நூலில் குறிப்பிடாதது பெருவியப்பே.

தம் நாடு, தம் மக்கள், தமிழ் நாடு, தமிழ் மக்கள் என்னும் குறிப்புகளை அவர் எங்குமே பெரிதாக வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. அப்படியானால் வள்ளுவர் நாட்டுப்பற்று அற்றவரா? இல்லை. உலக நோக்கு என்னும் பரந்து விரிந்த பார்வையில் அவர் நடையிடுவதால், அங்கு நாடு என்னும் உணர்வு எழவில்லை எனலாம்.

1.2 நாடும் குறிக்கோளும்

வள்ளுவர் நாடு என ஓர் அதிகாரம் அமைத்து, அதில் நாடு பற்றிய தம் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றனர். அவ்வதிகாரத்தில் அவர் கூறும் கருத்துக்கள் இங்குக் கருதத்தக்கவை. அவை வருமாறு:

நாடு என்பது, மேம்பட்ட பண்புகளையும் தகுதிகளையும் உடைய அரசனைத் தன்னிடம் கொண்டதாக விளங்கவேண்டும். (குறள் 740); தோண்டியவுடன் சுரக்கும் ஊற்று நீர் நிலைகளையும் ஏரி குளம் முதலிய தேக்க நீர் நிலைகளையும், துணை ஆறுகள் பல இணைந்து உருவாகிப் பல கிளை ஆறுகளையும் உடையதாய் அகன்று நீண்டு செல்லும் பேராறுகளையும் தன்னுள் கொண்டு வானம் வறப்பினும் தன்வளம் குன்றாச் சிறப்பினதாய் அமைதல் வேண்டும் (குறள் 737); கடல்நீர் முகந்து செல்லும் கருமேகத்தைத் தடுத்து மழை பெய்விப்பதும் மண் அரிப்பைத் தடுப்பதும் தன் வளம் குன்றாததுமான ஓங்கி உயர்ந்த மலையைப் பெற்று விளங்க வேண்டும் (குறள் 737); பகைவர்க்கு அச்சத்தையும் தன்பால் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பையும் நல்கவல்ல காட்டரண், காட்டாற்று அரண், மணல் அரண், மதில் அரண் ஆகிய அரண்களைப் பெற்று விளங்க வேண்டும் (குறள் 737); அன்றியும், தப்பாது விளையும் நிலங்களையும் குறையாத கனிச் செல்வங்களையும் பெற்று விளங்க வேண்டும் (குறள் 731).

ஒரு நாடு பல்வேறு உணவுப் பொருள்களை விளைவிப்பதில் தன்னிறைவு பெற்று விளங்க வேண்டும்; விளையும் விளைவில் மிகுதியைப் பிறநாட்டவர்க்கு வழங்கும் அளவிற்கான விளைச்சல் இருத்தல் வேண்டும் (குறள் 732); ஒவ்வொரு பயிர்வகையும் தன்னளவில் நிறைந்த விளையுளைத் தருவதோடு, மக்கள் வேண்டும் பல்வகைப் பயிரினங்களும் அந்நாட்டில் செறிந்து விளைதல் வேண்டும் (குறள். 738); குறைந்த முயற்சியில் நிறைந்த பயனைத் தருவதாக ஒரு நாடு விளங்குவதோடு, எல்லா நிலங்களிலும் / நாடுகளிலும் விளையும் பொருள்களைக் கலத்தினால் அல்லது காலினால் கொணர்ந்து மக்கள் பயன்

படுத்துமாறு செய்யும் இயல்பினதாகவும் விளங்க வேண்டும் (குறள். 739).

ஒரு நாட்டில் இயற்கை அமைப்பும் விளைவும் இருந்தால் மட்டுமே போதா, விளைவினை நன்முறையில் மிகுதியாக விளைவிக்கும் தகுதி வாய்ந்த மக்கள் இருத்தல் வேண்டும் (குறள். 731); நாளும் யார்க்கும் ஈயக் குறைபடாத செல்வம் உடைய-பிறரால் இகழப்படாத பல செல்வந்தர்களை உடைய தாகவும் விளங்க வேண்டும் (குறள்கள். 731, 732, 738).

பிறநாட்டவரும் விரும்பி வந்து தங்கும் நிலைமை உடைய தாகவும் (குறள். 732) எல்லா நாட்டவரையும் தாங்கும் ஆற்றல் உடையதாகவும் அந்நாடு விளங்க வேண்டும் (குறள். 733).

மேற்கூறிய நற்கூறுகள் பல பெற்றிருப்பினும், நாட்டில் வாழும் மக்கள் பசி, பிணி, இயற்கை / செயற்கை கேடு ஆகியவற்றால் துன்புறாதவாறும் இருத்தல் வேண்டும் (குறள்கள். 732, 734, 736); அந்நாட்டில், புறத்திலிருந்து வந்து அழிவு செய்யும் பகையும் உட்பகையும், அரசனை அலைக்கும் கொல்வினைக் குறும்பரும் (குறள். 735) இல்லாது இருத்தல் வேண்டும்.

மேற்சுட்டிய சிறப்புகள் அனைத்தும் உடையதே நாடு என வள்ளுவம் உரைக்கின்றது: அத்தகைய ஒரு 'குறிக்கோள் நாட்டை' வள்ளுவம் எதிர்பார்க்கின்றது.[1]

மேற்கண்ட நாடு பற்றிய வள்ளுவக் கருத்துகள் ஒவ்வொரு நாட்டுக்கும் வேண்டிய அடிப்படைக்கருத்துகளே; உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் இவை பொருந்தும்; கருத்துகளை வெளிப் படுத்தும் போதும் தமிழ்நாட்டிலிருந்து எடுத்துக்காட்டுகளோ, தமிழ்நாட்டுச் சிறப்புப்பெயர்களையோ வள்ளுவர் பயன்படுத்த வில்லை; உலகம் என்னும் பரந்த நோக்கில் உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் பெரும்பான்மையும் பொருந்தும் அடிப்படைக் கருத்துகளையே வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். ஆகவே, உலகம் என்றும் பரந்த பொதுமை நோக்கில்தான் 'நாடு' என்பதை வள்ளுவர் அணுகுகின்றார் என்பது தெளிவு.

---

1. *தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்*, வள்ளுவர் கண்ட நாடும் காமமும், *பழனியப்பா பிரதர்ஸ்*, சென்னை, *1954, ப. 52.*

2. மொழி

திருவள்ளுவர் தம் நூலைத் தம் தாய்மொழியான தமிழில் செய்தவர் ; தமிழ்மொழியின் அருமை பெருமைகளை – இலக்கிய இலக்கண வடிவங்களை நன்கு அறிந்தவர். அவ்வாறிருந்தும், தம் நூலில் ஓர் இடத்திலும் கூடத் 'தமிழ்' என வழங்காதது வியப்பே. அதனால், அவர் தமிழ் உணர்வு அற்றவர் என்பதன்று பொருள். உலகம் என்னும் பரந்து விரிந்த பார்வை அவருடைய பார்வை. ஆதலின், தமிழ் உணர்வை வெளிப்படையாக அவர் எங்குமே வெளிப்படுத்தவில்லை என்றே கொள்ளுதல் வேண்டும்.

'அகர முதல எழுத்தெல்லாம்' எனத் தம் நூலைத் தொடங்குகின்றார் வள்ளுவர். இங்குத் தமிழ்மொழியின் முதல் எழுத்தாகிய அகரத்தை மட்டுமே குறிப்பிடுகின்றாரா என்பது ஐயப்பாடே.

> *உண்மையில் மக்கள் மட்டுமன்று, உயிரினமனைத்தும்*
> *ஒலிப்பதற்கு முதலில் வாயை அங்காத்தல் வேண்டும். திற*
> *வாமல் மூடிய வாயில் ஒலி பிறவாது. இனி, அங்காக்கும்*
> *அவ்வளவே தோன்றுவது 'அ'கரமாம். அதன் பிறகு பிறக்கும்*
> *ஒலிவகை அனைத்துக்கும் வாய்மூடாமல் அங்காத்திருப்பது*
> *இன்றியமையாதது ; அங்காப்புள்ளவரை அகர ஒலி நிற்கும்;*
> *அகர ஒலி மறையில், அங்காத்தலும் முடியும். அது முடிந்தால்*
> *ஒலி எதுவும் நிலையாது. எனவே தமிழ், ஆரிய நெடுங்*
> *கணக்குகளில் மட்டுமின்றி வாய் திறந்து பேசும் எழுத்துக்களில்*
> *எல்லாம் என்றும் அகரம் முதலாதல் வெளிப்படை,*
> *கால இடங்களில் முற்படுவது மட்டுமில்லை;*
> *அகரமின்றி ஒலியே பிறவாதாதலானும், பிறவொலி*
> *பிறப்பதற்கு அகரம் அங்காத்தலால், உடனின்றொலித்*
> *தலானும், அகரம் எழுத்தினங்கள் எல்லாவற்றிற்கும்*
> *முதற்காரணமாவதோடு, ஒவ்வோரெழுத்திற்கும் உடனின்று*
> *-தவும் துணையாயுமிருக்கக் காண்கின்றோம்[2]*

---

2. டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர், நாவலர் புத்தக நிலையம், மதுரை, 1971, பப. 80-81.

என்கிறார் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார். இவ்வடிப்படையில் நோக்கின் அதாவது 'அகரம்' என்பது ஒலி வடிவைக் குறிப்பது எனக் கொளின்—அது உலக மொழிகள் அனைத்திற்குமே முதல் ஒலியாக அமைந்து விளங்குவது தெளிவு. ஆகவே, வள்ளுவர் 'அகர' எனச் சுட்டியது தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய வரி வடிவையன்று; உலக மொழிகள் அனைத்திற்குமே முதலாக விளங்கும் ஒலி வடிவையே என்பது போதரும்.

மேலும், வள்ளுவர் நினைத்திருப்பின், மூன்றாவது பாலாகிய காமத்துப்பாலைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப்பகுத்து அப்பகுப்பின் அடிப்படையில் ஒருவன் ஒருத்தியின் அறநெறிப்பட்ட வாழ்வினை வரையறுத்து உரைத்திருக்கலாம். அல்லது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என உரிப்பொருள்களின் அடிப்படையில் தமிழ் அகநெறிக்கு ஏற்பக் காமத்துப்பாலைப் பாகுபாடு செய்து ஒருவன் ஒருத்தியின் அன்பு வழித்தான அறவாழ்க்கையைத் தெளிவுப் படுத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறெல்லாம் தமிழ் அகநெறிக்கு ஏற்ற முறைக்குச் செல்லாமல் பெரிதும் தலைமக்களின் அன்புவாழ்க்கையில் ஏற்படும் பொதுவான உணர்ச்சிகளை மட்டுமே வெளிப்படுத்திச் செல்கின்றார்.

வள்ளுவர் நினைத்திருந்தால், களவு வாழ்க்கையில் நிகழும் உள்ள உணர்ச்சிகளைக் காமக்கூட்டம், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியர்க் கூட்டம் என நான்காகப் பகுத்து முறைப்படுத்தி உரைத்திருக்கலாம். மேலும் கற்பிற்குரிய செய்திகளை,

மறைவெளிப் படுதலும், தமரின் பெறுதலும்
இவைமுத லாகிய இயல்நெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்புஎனப் படுமே (தொல்.1443)

எனத் தொல்காப்பியர் பாகுபடுத்தியதற்கேற்பப் பாகுபடுத்தித் தலைமக்களின் உள்ள உணர்வுகளை முறைப்படுத்தி உரைத்திருக்கலாம். இவ்வகையில் எதையுமே வள்ளுவர் தமக்குரிய முறையாக்கிக் கொள்ளாமல், தமக்கே உரியதொரு பொது நிலையை அவர் வகுத்துக்கொண்டு காமத்துப்பாலை ஆக்கியுள்ளார்.

வள்ளுவர் நினைத்திருப்பின், அகப்பொருள் மரபில் சிறப்பிடம் பெறும் உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய உவம மரபுகளுக்குத் தக்கதொரு சிறப்பிடம் தந்திருக்கலாம்; ஆனால் இவற்றிற்கு

யாதோர் இடத்தையும் திருவள்ளுவர் காமத்துப்பாலில் வழங்காதது கருதத்தக்கது. மடலேறுதல் போலும் ஒரு சில தமிழ் அகப்பொருள் மரபிற்குரிய குறியீடுகளும் செய்திகளும் காமத்துப்பாலில் இடம் பெற்றிருப்பினும், அவையும் தலை மக்களின் உள்ள உணர்ச்சி என்னும் வெளிப்பாட்டில் மறைந்து போகின்றன

வள்ளுவர் நினைத்திருந்தால், புறம் பற்றிய செய்திகளுக்குக் (குறிப்பாகப் போர்பற்றிய செய்திகளுக்குக்) குறிப்பிடத்தக்கதோர் இடம் தந்து அது தொடர்பான கருத்துகளை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் பகுத்து முறைப்படுத்தி உரைத்திருக்கலாம். அத்தகைய நோக்கு வள்ளுவருக்குச் சிறிதும் இல்லாதது கருதத்தக்கதாகும்.

திருக்குறளில், பெயர் வைப்பு மரபு, அறம் பொருள் இன்பம் வைப்பு முறை மரபு, அதிகாரப் பெயர் வைப்பு மரபு, எண்ணிக்கைச் சமநோக்கு மரபு, முன்னோர் மொழிப் பொருள் போற்றும் மரபு, பழங்கதைகளைக் கையாளும் மரபு, உவம மரபு[3] அகப்பொருள் புறப்பொருள் மரபுகளில் ஒரு சில ஆகியன காணப்படினும் அவையெல்லாம் 'பாலில் நெய்போல்', 'மணியிடை நூல்போல்' மறைய நின்று ஆராய்வார்க்கு மட்டுமே புலனாகும் வகையில் அமைந்து, திருக்குறளின் பொதுமை நோக்கிற்குப் பெரிதும் ஊறுபயக்கா வண்ணம் உள்ளன.

இவையெல்லாம், திருவள்ளுவர் ஒரு தமிழரேயாயினும் தமிழியலைத் தெளிவாக அறிந்தவரேயாயினும், அவர் தமிழ் உணர்வை வெளிப்படையாகப் புலப்படுத்தாமைக்குச் சில சான்றுகளாக அமைகின்றன.

3. இனம்

3.1 அடையும் பொருளும்

திருக்குறளில் 'குன்றா இனன்' (குறள். 793), 'சிற்றினம்' (குறள். 451), 'தக்கார் இனம்' (குறள். 446), 'தீயினம்' (குறள். 460), 'தெரிந்த இனம்' (குறள். 462), 'நல்லினம்' (குறள். 460) என இனம் (இனன்) என்னும் சொல் அடை கொடுத்து வழங்கப்பட்டுள்ளது.

---

3 டாக்டர் கு. மோகனராசு, திருக்குறளில் மரபுகள், *சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை, 1981.*

'குன்றா இனன்' என்பதற்குக் 'குறைவற்றசுற்றம்' எனப் பொருள் கொண்ட பரிமேலழகர், 'சுற்றுப் பிணிப்புடையார் நட்டாரோடுப் பிணிப்புண்டு வருதலின் 'குன்றா இனன்' என்றும்... கூறினார்' என விளக்கமும் தருகின்றார். மணக்குடவரும் பரிப்பெருமாளும் 'குறைவில்லாத சுற்றம்' என்றும், காலிங்கர் 'குறைபாடு இல்லாச் சுற்றம்' என்றும் பொருள் கொள்கின்றனர்.

'சிற்றினம்' என்பதற்குப் பரிமேலழகர்,

சிறிய இனமாவது, நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும், விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு

அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய் அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்று ......

என்று விளக்கம் தருகின்றார். மணக்குடவரும் பரிப்பெருமாளும் காமுகர், சூதாடிகள், பெண்டிர் முதலாயினோரைச் சிற்றினமாகக் கருதுகின்றனர். பரிதியார் அறிவுக்கீனனைச் சிற்றினமாகக் கொள்கின்றார். இவர்கள் அறத்தையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டு சிற்றினம் என்பதற்குப் பொருள் விளக்கம் தருகின்றனர் எனலாம். அரசியலில் மகளிர்க்குத் தக்க இடமின்மையால் அவர்களையும் சிற்றினமாகக் கருதுகின்றனர் போலும், 'பெண் வழிச் சேரல்' என வள்ளுவர் ஓர் அதிகாரமே அமைத்திருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

'தக்கார் இனம்' என்பதற்கு 'அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையார் இனம்' என்றும், 'தமது அறிவு மிகுதியால் தகாதன வற்றுக்கு இடிக்கத்தகும் சான்றோர்' என்றும் பொருள் கொள்கின்றனர்.

'தெரிந்த இனம்' என்பதற்குத் ' 'தாம் தெரிந்து கொண்ட இனம்' எனப் 'பரிமேலழகரும்' 'அமாத்தியர் பலருள் ஆராய்ந்து கூட்டிக்கொள்ளப்பட்ட மந்திரிகளாகிய இனம்' என மணக்குடவரும், 'பெரியோர்' எனப் பரிதியாரும், 'யாதும் ஒரு கருமம் செய்யுமிடத்து அதனைக் கல்வியால் தெரிந்த இனம்' எனக் காலிங்கரும் பொருள் கொள்கின்றனர். ஒரு வினையை ஆற்றுவதற்கு அரசன் தேர்ந்து கொண்ட அரசு அலுவலர்களையும் சான்றோர்களையும் இத்தொடர் குறிப்பிடுகின்றது,

பொதுவாக, அறிவு, அற உணர்வு, தகுதி, அவர்தம் தொழில் வன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இனம் என்ற சொல்லை உரையாளர்கள் வரையறுக்க முனைந்துள்ளனர் எனக் கொள்ளலாம்.

3 2. இனத்தின் இயல்பு

ஒருவருடைய இனத்தை அடிப்படையாகக் கொண்டே அவருடைய அறிவு திரிபடைகிறது (குறள். 452); புகழும் பழியும் கிடைக்கிறது (குறள். 453). நல்லினம் கிடைக்கப் பெற்றால் ஒருவருடைய அறிவு மேன்மை அடைகிறது (குறள் 454); மனத் தூய்மையும் செய்வினைத் தூய்மையும் வாய்க்கிறது (குறள். 455); எல்லா வினைகளும் நன்மைகளாக முடிகின்றன (குறள். 456); புகழ் கிடைக்கிறது (குறள். 457); பாதுகாவலும் கிடைக்கிறது (குறள். 458). பகைவர் அத்தகையோரை எவ்வகையானும் வெல்ல முடியாது (குறள். 446). ஆகவே,

நல்லினத்தி னூங்குந் துணையில்லை (குறள் 460)

என்பது வள்ளுவம்.

எங்குமே வள்ளுவர் பொதுநிலையில்தான் இனம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றாரேயொழிய. ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பற்றிய செய்தியை-சிறப்பாகத் தமிழ் இன உணர்வை வள்ளுவர் மறந்தேயும் எங்கும் வெளிப்படையாகச் சுட்டவில்லை.

முடிவுரை

இதுவரை கூறியவற்றால், தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழ் இம் பற்றிய பல்வேறு கருத்துகளை வள்ளுவர் அறிந்திருந்த போதும், அவ்வுணர்வுகளை வெளிப்படையாக எங்கும் வெளிப் படுத்தாமல் உலகப் பொதுமை நோக்கிலேயே நாடு, மொழி, இனம் தொடர்பான செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார் என அறிகிறோம்.

திரு. வி. க.-வின் இதழ்ப்பணி

நெல்லை. ந. சொக்கலிங்கம், எம். ஏ. ஏ. எம் ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625 021.

கலப்பும் கவலையும்

பொது ஜனங்களே! அக்ராசனாதிபதி அவர்களே! எனக்கு "டாமில்"வராது; எக்ஸ்கியூஸ் மி! என்று தமிழக அரசியல் மேடைகளிலே கலப்புத்தமிழ் கலக்கிய காலகட்டம் இந்த நூற்றாண்டின் முற்பகுதி. தமிழ் மேடைகள்தாம் இப்படி விளங்கினஎன்றுஇல்லை. தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட செய்தி இதழ்களும் கிழமை ஏடுகளும் கூடக் கலப்பு நோய்க்கு இரையாகின. 'சர்மிளா திடீரென்று அந்த ரூமுக்குள் எண்டர் பண்ணியது எல்லோருக்கும் திரில்லாக இருந்தது. அவள் ஃபிளவர் டிசைன் ஆக்கிரமித்துக்கொண்டிருந்த நைலான் சாரியுடன் 'குட்மார்னிங்' என்று கூறிக்கொண்டே கையில் இருந்த ஹேண்ட் பேக்கிலிருந்து ஒரு ஃபுளு கலர் கர்ச்சிப்பை எடுத்தாள். வாட் ஏ வொண்டர்; அந்தக் கர்ச்சிப் ரத்தக்கறை படிந்திருந்தது... சர்மிளாவின் பேஷ் அதைவிட ரெட்டிஷாக இருந்தது... ரூமிலிருந்த ஸ்டூடன்ஸ் ஸ்டன்னாகி நின்றனர் என்று கலப்பிலே இரண்டறக்கலந்து விளங்கிய கொடிய காட்சியினை இன்றும் காண்கிறோம். இப்படி தமிழைச் சிதைத்து வந்த காலத்திலே தமிழ் உணர்வுடனும் தமிழின உணர்வுடனும் தம்முடைய பேச்சாற்றலால், எழுத்தாற்றலால் இன்பத்தமிழுக்கு ஏற்றந்தந்தவர் திரு வி. கல்யாணசுந்தரனார். இவ்விருநிலைகளை ஒப்பிட்டுக்காட்டும் வண்ணம் மேற்கண்டவாறு எழுதிச்செல்கிறார் கலைஞர் திரு. மு. கருணாநிதி.

"இலக்கணமும் இலக்கியமும்
தெரியாதான் ஏடெழுதல்
கேடு நல்கும்,
தலைக்கணையில் நெருப்பிட்டுத்
தலைவைத்துத் துயில்வதுபோல்
பகைவனைப் பேசாய்
நிலைப்புற்ற தமிழ்ஏட்டில்
ஆசிரியனுக்குவது
நீங்க வேண்டும்" 2

---

1. 'கலைஞர் மு. கருணாநிதி, திரு. வி. க. வின் தமிழ் - தமிழின உணர்வுகள்', உண்மை திரு. வி. க. சிறப்பிதழ், 1—11 - 82, ப. 14.
2. பாரதிதாசன், தமிழியக்கம், (இராமச்சந்திரபுரம்:செந்தமிழ் நிலையம், ஐந்தாம் பதிப்பு, 1962), ப. 47

என்று பாவேந்தர் பாரதிதாசனார் பாடியது 1945-ஆம் ஆண்டில். ஆயின் 1917-ஆம் ஆண்டிலேயே செயலுக்கு வந்தது என்னும் போது வியப்பு மேலிடுகின்றதன்றோ! ஆம்! 7—12—1917-ஆம் ஆண்டிலேதான் தமிழ்த்தென்றல் திரு. வி. க 'தேசபக்தன்' நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இந்திய நாட்டு மக்களுக்கு இணையில்லாத் தொண்டு புரியவேண்டும் என்ற அன்புள்ளம் திரு. வி. க. வின் உள்ளத்திலே பல ஆண்டுகளாக வேரூன்றி நின்றது. அது மட்டுமா? "ஜஸ்டிஸ் கட்சி சமூகச் சீர் திருத்தத் துறையில் இறங்கி உழைத்திருந்தால் நாட்டுக்கு நலனே விளைந்திருக்கும். அக்கட்சி, அரசியலில் தலைப்பட்டுச் சுய ஆட்சிக்கு இடர் விளைத்தது; வகுப்புவாத நஞ்சை உமிழ்ந்தது. வகுப்புவாதக் கட்சியால்தீமையே பெருகும் என்று யான் உண்மை யாக நம்பினேன். தீமையை மறிக்க வேண்டுவது எனது கடன் என்று உணர்ந்தேன். அதற்குப் பத்திரிகை அவசியம் தேவை என்ற எண்ணம் என் உள்ளத்தை உறுத்திக் கொண்டே வந்தது. பத்திரிகையைப் பற்றிச் சுப்பராய காமத்தும் யானும் பன்முறை சிந்திப்போம்"[3] என்பதும் திரு வி. க இதழ் ஆசிரிய ராகக் காரணமாகும். திரு. வி. க. தேசபக்தன் என்ற நாளேட் டையும், நவசக்தி என்ற வார ஏட்டையும் நடத்தியுள்ளார். இவ்விரு இதழ்களின் வாயிலாகவும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் பல்வேறு நல்ல பணிகளைச் செய்துள்ளார் என்பதில் ஐயமில்லை. இனி அப்பணிகள் குறித்துக் காண்போம்.

கல்வியின் புகழுரை

"தமிழ்ப்பண்டிதர் என்றால் அப்போதெல்லாம் கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் அம்மையப்பபிள்ளைதான் கண்ணெதிரே நிற்பார். படித்தசமூகத்துக்குள்ளே ஒடுக்கப்பட்டவர்களும் தாழ்த் தப்பட்டவர்களும் தமிழ்ப் பண்டிதர்கள். அப்பேர்ப்பட்ட தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவர். ஓர் அரசியல் தினசரிப்பத்திரிகைக்கு ஆசிரியராக வந்திருக்கிறார் என்றால் ஒரே வியப்பும்திகைப்பும் உண்டாவது இயல்பே அல்லவா? பின்னர் 'தேசபக்தன் இதழ் களைப்பார்க்கப் பார்க்க, "என்ன துணிச்சல் என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்! எவ்வளவு தீவிர தேச பக்தி! என்ன தமிழ்! என்று தமிழ் நாடே வியந்து கொண்டிருந்தது. எல்லாவற்றிலும் அதிக வியப்பு "என்ன தமிழ்" என்பதற்காகத் தான்"[4] என்று கல்கி தமிழ் ஆசிரியராகிய திரு வி. க வைக் குறித்து வியந்து பாராட்டிப் பேசுவார். அத்தகைய பெருமைக்கும்

3. திரு. வி. கலியாண சுந்தரனார், திரு. வி. க. வாழ்க்கைக்குறிப்புக்கள், பகுதி 1 (சென்னை ; கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1969, ப. 263

4. கல்கி, பாரதி பிறந்தார், ப. 46

பெருமிதவுணர்வுக்கும் உரியவராக விளங்கினார் திரு. வி. க. சென்னை வெஸ்லி கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக அவர் பொறுப்பேற்றிருந்தார் அப்பொழுது தான் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்குமாறு 'நியூ இந்தியர்' என்ற தேசிய இதழின் துணையாசிரியராக விளங்கிய சுப்பராயகாமத்து, தமிழ்த்தென்றலை வற்புறுத்தி அழைத்தார். கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகவே தேசபக்தனின் ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழகத்தின் மூன்றாவது தமிழ் நாளேடு என்னும் பெருமையுடையதாக விளங்கிற்று தேசபக்தன். பக்தனுக்கு முன் சுதேசமித்திரனும் திராவிடனும் நாளேடுகளாகத் தமிழ் மண்ணில் செய்திகளை மக்கள் நெஞ்சிலே பதிய வைத்தன. தேசபக்தன் என்ற பெயரைத் தெரிவு செய்தமை பற்றித் திரு.வி.க. கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''பல பெயர்கள் எங்கள் நினைவிலுற்றன. இறுதியில் சில பெயர்களைச் சீட்டுக்களில் தீட்டிக் குலுக்கித் தரையில் இரைத்தோம். ஏதாவதொன்றை எடுக்குமாறு ஒரு சிறுவனைக் கேட்டோம். அவன் கையில் கிடைத்த பெயர் 'தேசபத்தன்' என்பது''.[5] இப்போதைய பெயர்களுக்கும் இதற்கும் உரிய வேற்றுமை நன்கு புலப்படும்.

திரு. வி. க. வின் துணிவும் தொண்டும்

தேசபக்தனின் ஆசிரியராக விளங்கிய திரு. வி. க. கணக்கு வழக்குகளில் தலையிடவே மாட்டார். மேலாளராக இருந்த பி. என். திருநாவுக்கரசு முதலியாரிடம் அளவிறந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.[6] இதழாசிரியராகிய திரு. வி. க. நேர்மையின் பிறப்பிடமாய்த் துணிவின் உறைவிடமாய் விளங்கினார். ''யான் உருத்திரன் ஆனேன்; என் எழுதுகோல் பாசுபதமாயிற்று. எனக்குத் துணைபுரிந்த கணத்தவர்கள் எப்படியானார்கள்? அவர்கள் வேலாயுதர்களாகவும், கோதண்டபாணிகளாகவும், காண்பீர்களாகவும் ஆனார்கள்''[7] என்று அவர் எழுதிச் செல்லும் குறிப்பினை எண்ணும்போது அன்னாரின் துணிவு தெளிவாகும்.

இந்திய நாட்டு மக்களின் மனத்தில் விடுதலை உணர்வை ஆழமாக வேரூன்றச் செய்தது சிப்பாய்க் கலகமே. அதன் விளைவாக இந்திய நாடெங்கிலும் சிற்சில நாளேடுகள் தலை தூக்கின. இதற்கிடையில் நம் மக்களிடையே சாதி சமயப் பிணக்குகள் வளர்ந்து மிகத் தலைவிரித்தாடின. தேசியவுணர்வை இப்பிணக்குகள் மட்டுப்படுத்தித் திசைதிருப்பி விடும் சூழ்நிலை

5 திரு. வி. கலியாணசுந்தரனார், மு.நூ., ப. 264
6 ஷை , ப. 266
7 ஷை , ப. 265

நிலவிற்று. அதனை ஒடுக்கும் துணிவிலே முன்னணியில் நின்றது தேசபக்தன் ஆகும். அதற்குக் காரணம் திரு. வி. க. அதன் ஆசிரியராக விளங்கியமையே என்று கூறலாம். "ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரியர் ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும் நேர்மையும் கலங்காமையும் பாரபட்சமின்மையும் அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாக்ஷிணியமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின"[8] என்று வ. வே. சு. ஐயர் பெருமிதத்துடன் கூறுவது திரு. வி. க. வின் துணிவிற்குத் தக்க சான்று ஆகும்.

தேசபக்தனின் அமைப்பு

தேசபக்தன் காலையில் மலரும் இதழாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் தேசபக்தன் அலுவலகத்திற்கு விடுமுறை நாளாகும். தொழிலாளர் தலைவராக விளங்கிய திரு. வி. க. பாரத்தில் ஒரு நாள் தொழிலாளர்க்கு விடுமுறை அளித்தமை இதனால் புலனாகின்றது. 19½ அங்குல நீளமும் 13½ அங்குல அகலமும் கொண்டது இவ்விதழ். ஒரு பக்கம் ஐந்து களங்களாகப் பிரிக்கப்பட்டுச் செய்திகள் வெளிவரும். முதற்பக்கம் நீங்கலாக உள்ள ஏனைய பக்கங்களின் தலைப்பில் பக்க எண், இதழின் பெயர், வெளிவந்த நாள், கிழமை, ஆண்டு, தேங்கள் ஆகிய குறிப்புக்கள் விளங்கும். அக்குறிப்புகளின் கீழே நீண்ட இரண்டு கோடுகள் இடப்பட்டிருக்கும். இதழ் பத்து பக்கங்களைக் கொண்டு வெளிவந்த நாளில் நான்காம் பக்கத்திலும், பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டு வெளிவந்த நாளில் ஆறும் பக்கத்திலும் தலையங்கம் வெளியாகும். தலையங்கப் பக்கத்தில் தேசபக்தனின் இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும். 'தெய்வமிகமேல்', 'தக்கார் நெறி நில்', 'தேசத் தோடொத்து வாழ்' என்னும் விருதுச் சொற்றொடர்கள் எழுதப்பெற்று ஒரு வட்டம் இருக்கும். அவ்வட்டத்திற்குள்ளே நடுவில் இந்தியநாட்டுப் படமும் சென்னையைக் குறிக்கும் இடத்தில் ஒரு விண்மீனும் சுடர்விடும். இலச்சினைக்குக் கீழ் திருவாசகப் பாடல் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கும். ஒவ்வோராண்டின் முடிவிலும் ஆண்டு மலரை வெளியிட்டு அதனைத் 'தேசபக்தன் அநுபந்தம்' என்று குறிப்பிட்டு வெளியிட்டுள்ளார். இப்படிப் பல்வேறு வகையில் முன்னோடியாக அமைந்துள்ள தேசபக்தனின் உருவஅமைப்பினை, இதழியல் நோக்கிலே இனிது எடுத்து ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார் மா. ரா. இளங்கோவன்.[9]

8 மேற்படி, ப, 287

9 மா.ரா. இளங்கோவன், இதழியல் நோக்கு (சென்னை : சேகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 1981), ப. 82.

தேசபக்தன் இதழின் முகப்புப் பக்கத்தின் இடக்கோடி மேல் மூலையில் ''முடியாப் பிறவிக் கடலிற்புகார்''...'' என்ற பாடலையும் வலப்பக்க மேல் மூலையில் ''படிக்குந் திருப்புகழ் போற்றுவன்...'' என்ற பாடலையும் பதிப்பித்துள்ளார். இவை இரண்டும் கந்தரலங்காரப் பாடல்களாகும். தலையங்கப் பக்கத்தில் தேச பக்தன் இலச்சினைக்குக் கீழே, ''அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்...'' என்ற திருவாசகப் பாடலைப் பொறித்துள்ளமையும் இங்கு எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

தேசபக்தனின் தொண்டு

''தமிழ் தழுவாச் சுவடித னைத்
தணல்தழுவா திராதினிமேல்'' 10

என்று பாவேந்தர் பாரதிதாசனார் பாடினார். திரு. வி. க. நாளேட்டாசிரியராகப் பொறுப்பேற்றிருந்த நாளில், பிற நாளேடு கள் யாவும் ஆங்கிலத் தொடர்களை அப்படி அப்படியே எழுதி வந்தன. அவற்றிலிருந்து முற்றும் மாறுபட்ட தன்மையில் அமைந்திருந்தது தேசபக்தன் இதழ் என்றால் புதுமையன்றோ ;

திரு. வி. க. சின்னஞ்சிறு முற்றுச் சொற்றொடர்களை எழுது வதில் வல்லவர். 'பிரயாணம்' என்பதைச் செலவு என்றே குறிப்பார். சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, அறப்போர் போன்ற செந்தமிழ்ச் சொற்கள் இன்றைய நாளேடுகளிலும் நாவழக்கிலும் செழித்து நிற்கக் காண்கின்றோம். இவற்றை நமக்குவழங்கியவர் தமிழ்த்தென்றலே ஆவார். இத்தகைய சொல்லாக்கப் பணிகளை இன்றைய ஏடுகள் தொடர்ந்து செய்யாமை வருத்தத்தையே உண்டு பண்ணுகின்றது. ''இன்று அரசியல் பாஷையில் வழங்கும் அநேக சொற்கள் திரு. வி. க. வின் சிருஷ்டிகளே. புதிய ஆங்கிலப் பதங்களுக்குப் பொருத்தமான தமிழ்ப்பதங்களை உண்டாக்குவதில் திரு. வி. க. வுக்கு இணை திரு. வி. க. வே'' 11 தேசபக்தனுக்கு முன் தோன்றிய தமிழ் ஏடுகள் ஒவ்வொரு செய்திக்கும் ஆங்கிலத் தலைப்பும் தமிழ்த் தலைப்பும் தந்து எழுதும் அப்பழக்கத்தினை ஒழித்தவர் தமிழ்த் தென்றலே. ஆங்கிலேயரின் அடக்கு முறையில் அழுந்திக் கிடந்த இந்திய மண்ணில் தமிழ் மக்கள் உள்ளத்தில் தேசிய உணர்ச்சியையும், மொழியுணர்ச்சியையும் சமூக சீர்திருத்த எண்ணங்களையும் நல்ல தமிழ் நடையில் எழுதி ஒரு முன்னோடி யாக விளங்கினார். நாட்டு நிலைக்கு ஏற்பப் பல துறைகளிலும்

---

10 பாரதிதாசன், மு. நா., ப. 8

11 கு. அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப. 69

கருத்துச் செலுத்திய திரு. வி. க. நாட்டு விடுதலை உணர்வை மக்கள் உள்ளத்தில் வேரூன்றுமாறு செய்யும் திருப்பணியையே முதற்பணியாய்க் கொண்டிருந்தார். தேசபக்தியை வளர்க்க எண்ணிய திரு. வி. க அதற்குரிய நடைமுறையினை அழகுற அருந்தமிழில் விளக்கி எழுதியுள்ளார். அந்நடை வருமாறு :

''இப்பொழுது தமிழ் நாட்டளவில் தேசபக்தியை வளர்க்கும் முறைகளை எல்லைப்படுத்துவோம். பண்டைக்காலத்தில் தெய்வ பக்தியை வளர்த்தவர் பெரும்பாலும் முனிவரேயாவர். அவர்கள் லௌகீக காரியங்களில் பெரிதும் தலையிடுவதேயில்லை ; வைதீக காரியங்களிலே தங்கள் காலத்தைக் கழித்து வந்தார்கள். அவர் களை இல்லறத்தார்கள் போஷித்து வந்தார்கள். அதுபோல் இப்பொழுது தேசபக்தியை வளர்க்க ஒரு கூட்டத்தார் புறப்பட வேண்டும். அக்கூட்டத்தாருக்கு எவ்வகைப் பற்றும் இருத்தல் கூடாது. அவர்கள் தேசபக்தியை வளர்க்கும் ஒரு பற்றிலேயே பற்றுடையவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஒன்றுகூடித் தேசபக்தியை வளர்க்கவேண்டிய முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை ஊரவரே போஷிக்க வேண்டும்''[12] என்ற தலையங்கம் தேசபக்தனின் நிலையை நமக்கு இன்றும் உணர்த்தி நிற்கும். மற்றுமொரு தலையங்கத்தில் தேசியக் கல்வி குறித்து வலியுறுத்துகின்றமையினைக் காண்கின்றோம். ''தமிழ்நாட்டார் தமிழை மறந்தார்கள் ; சுதந்திரத்தை இழந் தார்கள் ; ஆங்கிலமயமாக விளங்குகிறார்கள். எல்லா நாட்டவரைப் போலச் சுதந்திரம் பெற்று வாழவேண்டுமானால், தேசபக்தியூட்டக்கூடிய நமது நாட்டுக் கல்வியை வளர்க்க முயலல் வேண்டும். தேசபக்திக்கு இடையூறு செய்யும் கல்வி தேச நலத்தைக் கெடுப்பதாகும். தேசபக்தி யாண்டு இல்லையோ ஆண்டுத் தெய்வபக்தியும் இல்லையென்று கூறலாம். நமது நாடு தெய்வ பக்தியில் பேர் பெற்றது. இப்பொழுது மாணாக்கர்கள், தெய்வ உண்மையிலேயே அவநம்பிக்கை கொள்கிறார்கள். தெய்வ பக்தியை விரும்புவோர் நாட்டுக்கல்வியை நாடல் வேண் டும்'' (தேசபக்தாமிர்தம்) என்பதே அது. இவ்வாறு நாட்டுணர் வையும் மொழியுணர்வையும் இரு கண்களெனக் கொண்டு தொண் டாற்றிய தேசபக்தன் இதழுக்கு இணையாக வேறு எந்த இதழும் இல்லை என்றே கூறலாம்.

செய்யுளுக்குச் சீரும் தொடையும் அடியும் எப்படிச் சிறந்த நிற்கின்றனவோ அப்படியே உரைநடைக்குச் சொல்லாட்சியும

12 தேசபக்தாமிர்தம், (சென்னை : பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடம், முதற் பதிப்பு, 1919 , ப. 13

பத்திப்பிரிவும் மிக மிக இன்றியமையாதவை. தேசபக்தன், நவசக்தி ஆகிய இவ்விரண்டில் தமிழ்நடையும் தெளிந்த தமிழ் நடை; சிறுசிறு தொடர்கள் அதனை அணிசெய்யும்; பொருளமைதி நிறைந்த பொலிவுற்றிருக்கும; புதுச்சொல் லாக்கங்கள் இடையிடையே பூத்துக் குலுங்கும்; நல்ல நல்ல இலக்கியச் சொற்கள் ஆங்காங்கே பயின்று, படிப்போர் உள்ளத்தில் பரவசம் ஊட்டும்; எளிமை அங்கே நடம்புரியும்; வினை முற்றுக்கள் பல்கி நின்று எண்ணத்தை ஈர்க்கும்; கேள்விக் கணைகள் படிப்பார் சிந்தனையைத் தூண்டும்!

நவசக்தியின் தோற்றமும் தொண்டும்

1920 ஆம் ஆண்டு சூலை 22-ஆம் நாள் தேசபக்தனிலிருந்து விலகிய திரு வி. க. அதே ஆண்டில் அக்டோபர் 22-ஆம் நாள் 'நவசக்தி' என்னும் வார ஏட்டினைத் தொடங்கினார். அதற்குப் பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியராக வீற்றிருந்து பணிபுரிந்தார் திரு. வி. க. நவசக்தி என்பதற்கு (ஒன்பது சக்தி) ஒன்பது ஆற்றல்கள் என்று பொருள். அவ்வொன்பது சக்திமார்களும் ஒன்பது வழியாக உலகத்தில் தொழில் புரிந்து வருவதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ்வழியே நின்று 'நவசக்தி' இதழும் தொண்டு புரிவதாகச் 'சிலம்பொலி' எனப்பெறும் ஆசிரியக் கட்டுரையில் திரு.வி.க. குறிப்பிடுவார் தொழிலாளர் எழுச்சியைத் திரு வி. க. "நவசக்தி" என்றே குறிப்பிட்டுப் பேசுகின்றார். அவ் எழுச்சியின் வெளிப்பாடே 'நவசக்தி' என்றே இதழின் பெயராகத் தெரிவு செய்ததாக அவரே குறிப்பிட்டுள்ளார்.[13] தேசபக்தனும் நவசக்தியும் அரசியற் கிளர்ச்சிக்குத் தோற்றுவிக்கப்பட்ட இதழ்கள் ஆகும். 22-10 1920-ல் வார ஏடாகத் தொடங்கப் பட்ட நவசக்தி, 20—10—1923-ல் வாரம் முப்முறையாக்கப் பட்டது. ஆனால் 31—5—1924 ல் வாரம் மும்முறை நிறுத்தப் பட்டு, வாரப் பதிப்பாக வெளிவரத் தொடங்கிற்று. நாளேட்டையும் வார ஏட்டையும் நடத்திய ஆசிரியர் திரு. வி. க. இரண்டினையும் குறித்து அவர் கூறும் கருத்து வருமாறு. "தேசபக்தன் மகன்; நவசக்தி மகள்... ஆவேசமும் பரபரப்பும் தேசபக்தனிடம் அலைந்தன; அன்பும் அமைதியும் நவசக்தியில் தவழ்ந்தன. 'தேசபக்தன்' அதிதேவதை குத்ரன்-எழுதுகோல் பாசுபதம்- நவசக்தியின் அதிதேவதை சிவம்-எழுதுகோல் குழல். தேசபக்தன் நடையில் காளி; நவசக்தி நடையில் உமை"[14]

---

13 திரு வி. கல்யாணசுந்தரனர், தமிழ்தென்றல் அல்லது தலைமைப் பொழிவு (சென்னை; அரசி புத்தக நிலையம், நான்காம் பதிப்பு, 1968), ப. 397

14 திரு. வி. க. கல்யாணசுந்தரனர் திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், ப. 29

நவசக்தி இதழின் நீளம் 9½ அங்குலம்; அகலம் 6½ அங்குலம் முன் பக்கத்தில் இதழின் பெயர் தடித்த எழுத்தில் மேற்பக்கம் அமைய, அதன் கீழ் வலப்பக்கம் "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற தொடரும், இடப்பக்கம் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தொடரும் அச்சிடப்பட்டிருக்கும். அவற்றின் கீழே சிலம்பு எண்ணும் தமிழ் ஆண்டும் திங்களும் பரல் எண்ணும் இணைகோடு களுக்கு நடுவில் கொடுக்கப்பட்டிருக்கும் இறுதிப் பக்கங்களில் விளம்பரங்கள் பதிப்பிக்கப்பட்டும் நவசக்தி வெளிவந்தது. தேச பக்தனைப் போலவே நவசக்தி தமிழ் மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றது அரசியற்பணியுடன் பல்வேறு சமூகச் சீர்திருத்தப் பணிகளையும் நவசக்தி ஆற்றி வந்துள்ளது. "நவசக்தி என்னிடம் வளர்ந்த காலம் முழுவதும் நவசக்தியில் அரசியல் பூத்த வண்ண மிருக்கும். அவ்வப்போது அக்கொடியினிடம் சமூக சீர்திருத்தம், பெண்நலன், மொழிச்சிறப்பு, கலையாக்கம் முதலியனவும் முகிழ்க்கும். இறுதியில் நவசக்தி மலர்களில் பெரிதும் சமதர்ம சன்மார்க்கமே கமழ்ந்தது"[15]. 1941–ஆம் ஆண்டு சனவரியில் நவசக்தியைவளர்க்கும் பொறுப்பை இராதாமணி அம்மையாரிடமும் (இசைக்கட்டுரைகளை நவசக்தியில் எழுதியவர்) சுப்பிரமணியம் என்பாரிடம் ஒப்படைத்தார். திரு. வி. க. நவசக்தியில் திரு. வி. க. அவ்வப்போது எழுதிய தலையங்கக் கட்டுரைகளைத் தொகுத்துத் 'தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு' என்று தலைப்பிட்டு நூலாக வெளியிட்டுள்ளார். இதே போன்று தேசபக்தனில் வெளி வந்த தலையங்கக் கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்துத் 'தேசபக்தாமிர்தம்' என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.

நவசக்தி இதழில் ஆசிரியக் கட்டுரை எழுதியதோடு அமையாது அவ்வப்போது பாடல்களும் எழுதி வந்துள்ளார். தமிழ்த்தாய், திருமால் அருள்வேட்டல், போன்ற பாடல்களை இயற்றி வழங்கியுள்ளார். மேலும் பழைய தமிழ் நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டுத் தொண்டு புரிந்துள்ளார் திரு. வி. க. இவ்வாறு வெளியிடப்பட்டவையே திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா, நெல்விடு தூது போன்ற நூல்கள் ஆகும்.

உரிமைப் போருக்கு ஒட்டுமொத்தமாக உழைக்க வேண்டிய பொழுதில், இந்தியாவிலே வகுப்புப்பூசல் தலைவிரித்து ஆடிற்று. அதனைக் களைந்தெறியும் திருத்தொண்டிலே ஈடுபட்டுத் தலையங்கம் தீட்டினார். இயந்திரங்களைப் பற்றியும் நோயற்ற வாழ்வு குறித்தும் அன்பு பற்றியும் நவசக்தியில் ஆசிரியக்கட்டுரை

15 திரு. வி. க. மு. நூ., ப 290

வரைந்த திரு. வி. க தவம், தவநெறிகளைப் பற்றியும் தலையங்கம் தீட்டியுள்ளார். தமிழர் திருநாள் என்று நாம் இன்று சிறப்போடு கொண்டாடுகின்ற பொங்கல் விழாவிற்குக் கால்கோள் விழா எடுத்தவர் திரு. வி. க. வே ஆவார் என்பதனை 13-1-1932ல் வெளிவந்த நவசக்தி இதழ் நன்கு தெளிவுறுத்தும்.

1924, 1925, 1926-ல் நடைபெற்ற நகராட்சி, சட்டமன்றத் தேர்தல்களின்போது காங்கிரசுக்கட்சி வெற்றி பெறும்பொருட்டு நவசக்தி பெருந்தொண்டு புரிந்துள்ளது.

திரு: வி. க. வின் நடை

நாளேடுகள் மக்கள் அனைவருக்கும் புரியுமாறு செய்தியைத் தரவேண்டும் ; அது புலமையை வெளிப்படுத்தும் கருவியன்று ; புல்லுருவிகளை உருவாக்கும் ஒரு தூண்டுகோலாக இதழ்கள் அமைதல் கூடாது என்று எண்ணிச் செயற்பட்டார் திரு. வி. க. எனவே, யாருக்கு எழுதுகிறோம் என்பதனை நன்கு எண்ணி எழுதினார் அவர். தமிழ் மக்களின் நெஞ்சிலே சுருக்கென்று தைக்கும் வண்ணம் அவருடைய இதழ்நடை விளங்கிற்று. திரு வி. க. வாழ்ந்த நாளில் வடமொழிச்சொற்களை வரம்பின்றிக் கலந்து எழுதுவோரும், தனித்தமிழிலே எழுதுவோரும் என்று இரு பிரிவினர் வாழ்ந்தனர். ஆயின் திரு. வி. க வின் நடையிலே எளிமையிருக்கும் ; உணர்ச்சி கொப்பளிக்கும். படிப்பவர் உள்ளத்தைச் சுண்டி இழுக்கும் நடையாக விளங்கிற்று. திரு. வி: க. வின் நடைக்கு ஒரு சான்று காண்போம்.

"உலகம் எல்லாப் படிகளையும் கடந்து இப்பொழுது தொழிலாளர் படியில் நிற்கிறது. உலக முழுவதும் தொழிலாளர் இயக்கந் தோன்றியிருக்கிறது. சில இடங்களில் தொழிலாளர் ஆட்சி பெறும் நிலையில் நிற்கின்றனர். சில இடங்களில் தொழிலாளர் உரிமை பெறக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். சில இடங்களில் தொழிலாளர் "உலகம் நம்மால் நடை பெறுகிறது" என்ற உணர்ச்சி பெற்று வருகின்றனர் .... இந்தியாவில் தொழிலாளர்கள் எந்நிலையில்யிருக்கின்றனர் ? இந்தியத் தொழிலாளர்கள் பன்னிரண்டு மணிநேரம் வேலை செய்து சிறு ஊதியம் பெற்றுத் தந்நிலை தாம் உணராமலே காலங்கழித்து வருகின்றனர். உலகத்தை நடத்துஞ் சக்தி பெற்றுள்ள தொழிலாளர் நிலை செழுமை பெறாதிருந்தமையே நமது நாட்டின் செழுமை குலைந்ததற்குக் காரணமாகும்"[16] என்று திரு. வி. க எழுதிச் செல்வதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

16 திரு. வி. கலியாணசுந்தரனார், தலையங்கம், 'தேசபக்தன்' (சென்னை: 10 டிசம்பர் 1919) ப. 4.

தேச பக்தனின் நடை குறித்துத் திரு. வி. க அவர்களே தம்முடைய வாழ்க்கைக் குறிப்பிலே பின்வருமாறு குறிப்பிடு கின்றார். "இலக்கணத்தைவிடாத பண்டிதர் என்று 1917-இல் தேசபக்தன் பத்திரிகையைப் படித்தவர்கள் என்னைக் குறிப் பிட்டவர். என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது; இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்றொன்று பத்திரிகை உலகை அடைந்த நாளில் அமைந்தது; எனக்கு உரியதாய் உடையதாய் நிலைத்தது.

தேசபக்தனுக்கென்று ஒரு தனிநடை கொண்டேன் சிறுசிறு வாக்கியங்கள் அமைக்கலானேன். எளிமையில் கருத்துக்கள் விளங்கும் முறையைப் பின்பற்றினேன். அந்த நடையை நாடோறும் எழுதிப்பண்பட்டமையால் அதுவே எனக்குரிய இயற்கையாகியது"[17]. இவ்வாறு தேசபக்தனுக்கென்றே ஒரு தனி நடையை அவர் பின்பற்றினார். அந்நடையிலும் கூட, பண்டைத் தமிழ்மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் மாறுபட்டுச் செல்லாத வகையில் சொற்களைக் கையாண்டுள்ளார். தம் கருத்துக்கள் யாவும் தமிழ் மக்களிடம் சென்றடையவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதினார் திரு. வி. க. அரசியற் கருத்துக்களைத் தமிழில் எழுத இயலாது என்று கூறியவர்கள் பலர் வாழ்ந்தார்கள். அன்னோரின் கூற்றுகளைப் பொய்யாக்கும்வண்ணம் அரசியற் கருத்துக்களையும் அருந்தமிழில் எழுதிக் காட்டினார் திரு. வி. க. இவரைப் போன்ற அந்நாளில் வேறு யாரும் எழுதவில்லை என்று துணிந்து கூறும் அளவிற்கு விளங்கியது அவர் நடை. "இந்தியா வின் சுதந்திர சரித்திரத்தில் தேசபக்தனுக்கு ஒரு ஸ்தானம் உண்டு இந்த பத்திரிகைதான் தமிழ் நாட்டில் தேசிய உணர்ச்சியை நேரிய முறையில் தமிழ்ப் பண்போடு கலந்து ஊட்டி வந்தது என்று சொன்னால் அது சரித்திர உண்மைக்கு எவ்விதத்திலும் புறம்பான தாகாது"[18] என்று தேசபக்தனின் துணையாசிரியராக விளங்கிய வெ. சாமிநாத சர்மா கூறுவது முற்றிலும் பொருந்தும்.

முடிவுரை

தேசபக்தன் என்ற நாளேட்டின் ஆசிரியராகவும் நவசக்தி என்ற வார ஏட்டில் ஆசிரியராகவும் விளங்கிய திரு. வி. க தம் கீழ்ப்பணிபுரிந்த துணை ஆசிரியர்களிடமும் ஊழியர்களிடமும் அன்பும் பெருந்தன்மையும் கொண்டவராக விளங்கினார்.

---

17 திரு. வி. க: மு. நூ., ப. 267

18 வெ. சாமிநாத சர்மா, நான்கண்ட நாவலர், ப. 169

(தொடரும்)

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. எஸ். நடராசன், எம். எல். ஏ ,
   தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார்,
   பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.
   முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் ச. பாலசுந்தரம்,
   367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

5. திரு புலவர் சி. கோவிந்தராசன்,
   கரந்தை, தஞ்சாவூர்–2.

6. திரு. புலவர் மீனா. இராமதாசன், எம். ஏ.,
   முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
   கரந்தை, தஞ்சாவூர்–2.

7. திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,
   அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க !

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. ....

அவர்கள்

....

....

....

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்திரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (பணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

ஆசிரியரும் வெளியிடுபவரும் : திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.